THE "VAKIL" TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

# "வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAY 1950
MADRAS

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

621
2.50

## இந்த இதழில்

அரசாங்க லட்ரியங்கள்

சர்க்கார் சின்னங்களை
வியாபாரத்தில்
உபயோகிக்கத் தடை

இன்சால்வென்சி சட்ட
திருத்தம்

1950—51 வருமானவரி

புதிய தொழில் வரி விகிதம்

விற்பனை வரி புது விதிகள்

சொந்தக்காரரே நடத்தும்
கடைகளுக்கு மறுபடியும்
ஷாப் சட்டம்

வழக்கும் - தீர்ப்பும்

கேள்வி - பதில்

கண்ட்ரோல் உத்தரவுகள்

## தமிழ் மாதப் பத்திரிகை



1201

THE "VAKIL" — மே 1950 — 4 அணா

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர்,  காஞ்சிவரம்,  கும்பகோணம்

# பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்.  தேவைக்கு உடனே முந்துங்கள்.

## ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு, :: கும்பகோணம்,

பிராஞ்சுகள் :—மெ, மெ. வீதி, காரைக்குடி & நாட்டரசன்கோட்டை

---

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சி செய்யும் பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கை நெசவு
**ஜரிகை பட்டு & நூல் சேலைகள்**

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கோடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

## ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத் தெரு — கும்பகோணம்

கிளை :—20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

26 MAY 1950

## சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1949 ஜூன் மாதம் முதல் "வக்கீல்" சந்தாதாரராகச் சேர்ந்த நேயர்களுக்கு இந்த இதழுடன் 12 இதழ்கள் அனுப்பப்பட்டு விட்டபடியால், தயவுசெய்து அடுத்த 12 இதழ்களுக்குள்ள சந்தாத் தொகை ரூ. 3-யும் மணியார்டர் மூலம் "மானேஜர், வக்கீல் காரியாலயம், தபால் பெட்டி 26, கும்பகோணம்" என்ற விலாசத்திற்கு அனுப்பவும். வருட சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும்.

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B A., B. L.,
,, G. நாகராஜபத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A , B. L.,
,, R. கோபாலசாமி, B. A. B. L,,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.

## "வக்கீல்"

### (சந்தா விபரம்)

| | |
|---|---|
| வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு | ரூ. 3—0—0 |
| தனிப் பிரதி ... ... | 0—4—0 |
| வெளிநாடு வருட சந்தா ... | 6—0—0 |

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 :: கும்பகோணம்

## "வக்கீல்"

### விளம்பர விகிதம்

ஒருமுறை பிரசுரம் செய்ய

| | |
|---|---|
| பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்) | ரூ. 100 |
| உள் அட்டை முழுப்பக்கம் | ரூ. 80 |
| உள் பக்கம் முழுப்பக்கம் | ரூ. 60 |
| ஷை ... அரை பக்கம் | ரூ. 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. 20 |
| ஒரு காலம் – அங்குலம் | ரூ. 5 |

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

# "வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 மே 1950 இதழ் 5

## பொருள் அடக்கம்

குறிப்புகள் 3

புதிய சட்டங்கள்
சுருக்கியும் - வரிசையாயும் 4

புதிய சட்டங்கள்
பொறுக்கியும் - விபரமாயும்
அரசாங்கத்தின் லட்சியங்கள் 5
அரசாங்கத்தின் சின்னங்களையும் பெயர்களையும் வியாபாரத்தில் உபயோகிக்கத் தடைச்சட்டம் 7
இன்சால்வென்சி சட்டத் திருத்தம் 8

வழக்கும் - தீர்ப்பும்
பசியால் ஏற்பட்ட கோபமே நான்கு கோரக் கொலைக்குக் காரணம் 10
உயில் எழுதி வைத்தவர் எண்ணம் பலிக்கவில்லை 12
புருடன் இறந்து 55 வருடங்களுக்குப்பின் விதவை-சுவீகாரம் 12

கேள்வி - பதில் 14

வரிகள்
1950-51 வருமான வரி விகிதம் 20
அமித வருமான வரி-சூபர் டாக்ஸ் 20
தொழில் வரிவிகிதம் மாற்றல் 21

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்
விலை நிர்ணயம்- இதர சர்க்கார் அறிக்கைகள் 22

"வக்கீல்" பத்திரிகை மாதம் இருமுறையாக
வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்



AT THE FIRST SIGN OF TROUBLE

GIVE JAMMI'S

**LIVER CURE**

FOR INFANTILE LIVER & SPLEEN COMPLAINTS

At all leading chemists

**WHOOCO**

FOR WHOOPING COUGH

JAMMI VENKATARAMANAYYA & SONS H.O. MAYLAPORE, MADRAS.

J88

## சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்

தயாரிப்புகள் :—

**அப்ஜா—ஆனந்தா—கதம்பா ரஞ்சிதா—நீரடிமுத்து**

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள் யாவராலும் போற்றப்படுபவை.

மொத்த வியாபாரிகள் மட்டுமே தேவைக்கு எழுதவும்.

## தி நியூ மாடர்ன் ஹோட்டல்

போர்டிங் & லாட்ஜிங்

நீ. 10 மேலப்புலவார்டு ரோட்

தெப்பக்குளம், :: திருச்சிராப்பள்ளி.

சகல வசதியும் நவீன சுகாதாரத்திற்கு ஏற்றதாகவும் உள்ள இடம். அன்பர்கள் யாவரும் விஜயம் செய்ய வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

Proprietor: K. R. அப்புசாமி அய்யர்.

## ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியரின் மூன்று பிரசித்திபெற்ற தயாரிப்புகள்

**வாரியர் பற்பொடி** (டப்பி 1-க்கு விலை அணா 6)

பற்களின் சுத்தத்திற்கும் நீடித்த உழைப்பிற்கும் உத்தரவாதமளிப்பது. பல் வியாதிகளைத் தடுப்பதிலும், குணப்படுத்துவதிலும் நிகரற்றது.

**வாரியர் பிருங்காமலகாதி தைலம்** (16 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 4)

சிரோ வியாதிகளை அகற்றி குளிர்ச்சியும், புத்துணர்ச்சியும் அளிப்பதில் பிரசித்தி பெற்றது.

**வாரியர் காங்காயன லேகியம்** (1 பவுண்டு டப்பி விலை ரூ. 5/- 80 வேளைக்கு)

எல்லாவிதமான மூல ரோகங்களையும் சஸ்திர சிகிச்சையின்றி நிச்சயமாக குணப்படுத்த வல்லது. (பாக்கிங், தபால் செலவு வேறு)

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா, தெப்பகுளம் (Estd. 1936) திருச்சிராப்பள்ளி.

(கோட்டக்கல் ஆரிய வைத்தியசாலா ஏஜன்ஸி)



18269

சென்னை-600 033

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
26 MAY 1950
MADRAS


# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 மே 1950 இதழ் 5


## குறிப்புகள்

ஜமீன்—இனும் ஒழிப்பு சட்டத்தைப் பற்றிய ஒரு பிரச்னை தீர்ந்தது: ஜீவாதார உரிமைகளை விளக்கும் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 31ஆவது (ஆர்டிகிள்) பிரிவின்படி எவருடைய சொத்துக்களையும் சர்க்கார் எடுத்துக் கொள்ளும்படி சட்டம் செய்தால் அச்சட்டத்திலேயே சொத்தை இழப்பவருக்கு சர்க்கார் கொடுக்க வேண்டிய நஷ்டஈடு எவ்வளவு என்று கண்டிருக்க வேண்டும்; அல்லது எந்தக் கொள்கைகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு நஷ்டஈடு கணக்குச் செய்ய வேண்டுமென்ற விதிகளாவது அச்சட்டத்திலேயே கண்டிருக்க வேண்டும். இரண்டுமில்லாமல் சொத்தை மட்டில் சர்க்கார் எடுத்துக் கொள்வதைப் பற்றி சட்டம் செய்துவிட்டு, சொத்தை இழப்பவருக்குக் கொடுக்க வேண்டிய நஷ்டஈட்டைப் பற்றி ஒன்றும் காணமலோ, அல்லது பிந்தி அது விஷயமாய் வேறு அதிகாரிகள் விதிகள் செய்வார்கள் என்றோ, கண்டிருக்கும் சட்டங்கள் செல்ல மாட்டாது. இது ஒரு ஜீவாதார உரிமை. இந்த உரிமையைப் பறிக்கும் சட்டங்கள் செல்லாதென்றும் அதன்படி தம்முடைய சொத்தை சர்க்கார் எடுத்துக் கொள்ளக் கூடாதென்றும் சொத்தை இழப்பவர் நீதி ஸ்தலங்களில் முறையிட்டுக் கொள்ள வழி உண்டு.

ஆனல் இந்த ஜீவாதார உரிமைக்கும் ஒரு விதிவிலக்கு. அதாவது அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு முன் உள்ள 18 மாதங்களுக்குள் இந்த உரிமைக்கு முரணுக ஒரு சட்டம் ஏற்பட்டிருந்தாலும் அதைக் குடியரசுச் சட்டம் அமுலுக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் இந்திய ஜனதிபதி அவர்களிடம் சமர்ப்பித்து அவர் அதை உறுதி செய்து ஒப்பம் வைத்து விட்டால் (சர்டிபை செய்தால்) அச்சட்டங்களும் செல்லுமென்று இருக்கிறது. இந்த அதிகாரத்தை அனுசரித்து ஜனதிபதி அவர்கள் சென்னை ஜமீன்-இனும் ஒழிப்புச் சட்டத்தையும் சென்னை மின்சார கம்பெனிகளை சர்க்காரே எடுத்துக்கொள்வதற்கான சட்டத்தையும் 'சர்டிபை' செய்திருக்கின்றனர். இச்சட்டங்கள் மேலே கண்ட நஷ்டஈடு சம்பந்தமான ஜீவாதார உரிமைக்கு முரணுக இருந்தாலும் செல்லும். இச்சட்டங்களைப்பற்றிய ஒரு பெரிய பிரச்னை தீர்ந்தது.

ஷாப் சட்ட விதிகள்: யாதொரு சிப்பந்தியும் இல்லாமல் ஒரு பிரிபடாத குடும்பத்தினரே கடை நடத்தினல் அவர்களுக்கு ஒரு வருடம் ஷாப் சட்டமே கிடையாதென்று 3—1—50-ல் சர்க்காரால் ஒரு விதி விலக்கு அளிக்கப்பட்டது. இன்னும் நான்கு மாதங்கள் கூட ஆகவில்லை. இந்த விதி விலக்கு இப்பொழுது ரத்து செய்யப்பட்டு விட்டது. அதற்குப் பதிலாக ஒரு புது விதி விலக்கு இவர்களுக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. இதை நேயர்கள் இந்த இதழில் வாசிக்கலாம். கொஞ்சம் நிதானமாக விதிகள் செய்யப்பட்டு விதி விலக்குகள் அளிக்கப்பட்டால் எவ்வளவு நன்ருக இருக்கும்!

# புதிய சட்டங்கள்

## சுருக்கியும்-வரிசையாகவும்

### 1950 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

(இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை)

[ இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" பத்திரிகை முந்திய இதழில் வரிசையாய்ச் சொல்லப்பட்டன ]

**11 ஆவது சட்டம்: ( 1—3—1950 )** இந்திய ரயில்வே சட்டத்தில் செக்ஷன் 27-A என்று புதிதாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படி, குறிப்பிட்ட சாமான்களையும் மத்திய சர்க்கார் அல்லது ராஜ்ய சர்க்கார்களுக்கு அனுப்பப்படும் சாமான்களையும் தாமதமின்றி விசேஷ வசதிகள் செய்து ரயில்வே மூலம் எடுத்துப் போக வேண்டுமென்று உத்தரவிட மத்திய சர்க்காருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**12 ஆவது சட்டம்: ( 1—3—1950 )** தேசியக்கொடி, அசோக சக்கரம் முதலிய பெயர்களையும் ராஜ சின்னங்களையும், மத்திய சர்க்கார் அனுமதியின்றி, எவரும் தம் தொழில் அல்லது வியாபாரத்தில் உபயோகப்படுத்தக் கூடாதென்று தடுப்பது.

**14 ஆவது சட்டம்: ( 9—3—1950 )** கிரிமினல் சட்டத் திருத்தம் பாகிஸ்தானுடன் சேர்ந்த ஜில்லா கோர்ட்டுகளால் ஏற்படுத்தப்பட்ட ஜப்தியை இப்பொழுது அந்த இடத்தில் அதிகாரமுள்ள இந்திய ஜில்லா கோர்ட்டால் செய்யப்பட்டது போல் பாவிக்க.

**15 ஆவது சட்டம்: ( 10—3—1950 )** இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஸி பாகத்தைச் சேர்ந்த சின்ன ராஜ்யங்களாகிய டில்லி, குடகு, போபால் போன்ற இடங்களில் இருக்கும் ஜுடிஷியல் கமிஷனர்களின் கோர்ட்டிலிருந்து நேரே சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம் என்று. இது விஷயத்தில் இக்கோர்ட்டுகளும் ஹைகோர்ட்டுகள் போலவே பாவிக்கப்படும்.

**16 ஆவது சட்டம்: ( 10—3—1950 )** 1947 ஆம் வருடத்திய 2 ஆவது சட்டமாகிய லஞ்சத் தடுப்புச் சட்டத்தின் 5 ஆவது செக்ஷன் மூன்று வருடங்களுக்குத்தான்; (அதாவது 11-3-1950 வரை) அமுலில் இருக்குமென்று இருந்ததைத் திருத்தி, ஐந்து வருடங்களுக்கு (அதாவது 11—3—1952 வரை) அமுலில் இருக்குமென்று சேர்க்கப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சில நடத்தைகள் குற்றமாகச் செய்யப்பட்டு அதற்கு ஏழு வருடம் வரை சிறை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்பட்டிருக்கிறது.


**18 ஆவது சட்டம்: ( 10—3—1950 )** பம்பாய், பீஹார், வங்காளம் இந்த ராஜ்யங்களிலுள்ள சில விசேஷ கோர்ட்டுகளின் அதிகாரத்தைப் பற்றியது.

**19 ஆவது சட்டம்: ( 11—3—1950 )** இந்திய சர்க்காரிடம் சம்பளம் பெற்றாலும், மந்திரிகள், உப மந்திரிகள், பார்லிமெண்டரி காரியதரிசிகள், உப காரியதரிசிகள் இவர்கள் இந்திய யூனியன் பார்லிமெண்டிலும் அங்கத்தினராக இருக்கலாமென்று அனுமதிப்பது.

**20 ஆவது சட்டம்: ( 18—3—1950 )** 1949 ஆம் வருடத்திய பாங்குச் சட்டத்தில் பல முக்கியமான திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. புதிய கிளைகள் ஏற்படுத்துவது பற்றியும், பல பாங்குகளைச் சேர்ப்பது பற்றியும், முறிந்த பாங்குகளின் நிர்வாகத்தைப் பற்றியும் பல முக்கிய விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**21 ஆவது சட்டம்: ( 18—3—1950 )** ஏற்றுமதி இறக்குமதி சாமான்களின் தீர்வைப் பட்டிச் சட்டம் (Indian Tariff Act) இவ்வருடத்தில் இரண்டாம் முறை திருத்தப்பட்டிருக்கிறது.

*(13, 17-ஆவது சட்டங்கள் இன்னும் பிரசுரமாகவில்லை.)*



# புதிய சட்டங்கள்

பொறுக்கியும் - விவரமாயும்

## இந்தியக் குடியரசு அமைப்புச் சட்டம்

## அரசாங்கத்தின் லட்சியங்கள்

முன்மாத இதழில் இந்திய மக்களின் ஜீவாதார உரிமைகள் எவை என்பதைக் கவனித்தோம். தனி ஒரு இந்தியனின் ஜீவாதார உரிமை சட்ட சபை அல்லது அரசாங்கத்தாரால் எவ்விதத்தில் பாதிக்கப் பட்டாலும் அவர் நீதிஸ்தலங்களில் அதற்குத்தக்க பரிகாரம் தேடிக்கொள்ள முடியும் என்பதையும் தெரிந்து கொண்டோம். தனி மனிதனின் சுதந்திரம் இவ்விதம் மற்றச் சுதந்திர நாடுகளில் இருப்பது போலவே, நம் நாட்டிலும் சட்ட பூர்வமாகக் காப்பாற்றப் படுகின்றது.

நாட்டின் சுதந்திரமும், அந்நாட்டிலுள்ள தனிப் பிரஜையின் சுதந்திரமும் மிக்க அவசியம் தான். ஆனால் இவை மட்டில் போதா. சுதந்திரத்தின் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும்; நீதியுடன் கூடிய சுக வாழ்வு வேண்டும்; இவைகளை அடைய மக்கள் தான் முயற்சிக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அதற்கேற்ற வசதிகளையும் சூழ் நிலையையும் உண்டாக்க வேண்டும். இதற்கு முன் உள்ள சட்டங்களில் இல்லாத ஒரு புது முறையில் நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் "அரசாங்கத்தின் லட்சியங்கள்" என்று ஒரு அத்தியாயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த லட்சியங்களைக் குறிக்கோளாக வைத்துக் கொண்டுதான் பார்லிமெண்டும் மற்றச் சட்ட சபைகளும் சட்டங்கள் இயற்ற வேண்டும்; அரசாங்கம் நடத்தப்பட வேண்டும். ஆனால் இந்த லட்சியங்களைக் குறிக்கும் விதிகளுக்கும் "ஜீவாதார உரிமை"களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக செய்யப்படும் சட்டங்கள் செல்ல மாட்டா; மக்களைக் கட்டுப்படுத்தா; பாதிக்கப் பட்டவர்கள் நீதிஸ்தலங்களில் பரிகாரம் தேடிக் கொள்ளலாம். ஆனால் இந்த லட்சியங்களைக் குறிக்கும் விதிகளுக்கு மாறாக ஏற்படும் சட்டங்கள் செல்லும்; இந்த விதிகளுக்கு மாறாக ஏற்படும் சட்டங்களால் பாதிக்கப்பட்டவர்கள் யாதொரு பரிகாரமும் தேடிக்கொள்ள முடியாது. இவைகளை உபதேச விதிகள் என்று சொல்லலாம். இனி அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தியக்குடியரசின் "லட்சியங்கள்" என்ன என்பதைக் கவனிப்போம்; அவை பின் வருமாறு:-

மக்களின் சமூக வாழ்விலும், பொருளாதாரத் துறையிலும், அரசியல் விஷயங்களிலும் நீதி நிறைந்த ஒரு சமூகம் உருவாக்கப்பட வேண்டும். அதற்காக அரசாங்கம்

(1) எல்லா மக்களுக்கும் (ஆண் பெண் சமமாய்) போதுமான உணவு கிடைக்க வழி செய்ய வேண்டும்.

(2) நாட்டில் உள்ள பொருள் உற்பத்திச் சாதனங்களின் உரிமைகளும் அவைகளை உபயோகிக்கும் பாத்தியங்களும், பொது மக்களுக்குப் பயன்படும் விதம் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

(3) நாட்டின் செல்வங்களும் உற்பத்திச் சாதனங்களும் பொது மக்களுக்குத் தீமை விளையும் விதம் ஒரு சிலரிடமே குவிந்து விடாமல் செய்ய வேண்டும்.

(4) யாவருக்கும், ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், ஒரே வித வேலைக்கு ஒரே வித ஊதியம் கிடைக்கும் படி செய்ய வேண்டும்.

(5) மக்களின் தேக ஆரோக்கியம், வலிமை, குழந்தைகளின் இளமை இவைகளைத் துர்விநியோகப்படாமல் பாதுகாக்க வேண்டும். வயதிற்கும் சக்திக்கும் மீறி உழைத்தால் தான் பிழைக்க முடியும் என்ற நிலைமை இல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

(6) குழந்தைகளையும் இளைஞர்களையும் சுய நலக்காரர்களின் சுரண்டல்களுக்கும் வறுமைக்கும் இரையாகாமல் பாதுகாக்க வேண்டும்.

(7) சக்தியுடன் கூடிய கிராம பஞ்சாயத்துக்களை அமைக்க வேண்டும்.

(8) மக்களுக்கு வேலை செய்ய வசதியும், கல்வி கற்க வசதியும் அளிக்க வேண்டும். வேலை இல்லாதவர்கள் கிழவர்கள், நோய் வாய்ப் பட்டவர்கள், அங்கமிழந்தவர்கள் இவர்களுக்கு உதவியளிக்க வேண்டும்.

(9) வேலை செய்பவர்களின் சூழ்நிலையை நியாயமானதாக்க வேண்டும்; மருத்துவ வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

(10) வேலை செய்பவர்கள் யாவருக்கும், விவசாயத்திலிருந்தாலும் சரி, கைத்தொழிலிலிருந்தாலும் சரி, மற்றத் தொழில்களில் இருந்தாலும் சரி, யாவருக்கும் (1) வேலை (2) போதுமான ஊதியம் (3) சீரான வாழ்வு (4) ஓய்வு நேரம் (5) சமூக கலாசார வசதிகள் இவை கிடைக்கும்படி செய்ய வேண்டும். முக்கியமாய்க் (கைத்தொழில்) குடிசைத் தொழிலை வளர்க்க வேண்டும்.

(11) இந்தியாவில் எங்கும் ஒரே விதமான வழக்கு முறைச்சட்டம் இயற்ற வேண்டும்.

(12) இந்தியாவிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பதினான்கு வயது வரை கட்டாய இலவச கல்வி புகட்ட வேண்டும். இதற்கான திட்டம் அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பத்து வருடங்களுக்குள் பூர்த்தியாக வேண்டும்.

(13) பிற்போக்கு வகுப்பினர், பூர்வ குடிகள், இவர்களின் கல்வி வசதிகளையும் பொருளாதார வசதிகளையும் விசேஷ கவனத்துடன் கண்காணித்து வர வேண்டும். இவர்களைச் சமூக அநீதிக்கும் சுரண்டலுக்கும் உட்படாமல் பாதுகாக்க வேண்டும்.

(14) மக்களின் சரீர போஷாக்கு நிலைமையையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும். பரிபூர்ண மதுவிலக்குத் திட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

(15) விவசாயத்தையும் கால் நடை பரிபாலனத்தையும் நவீன விஞ்ஞான முறைப் படி சீர்திருத்தி அபிவிருத்தி செய்ய வேண்டும். பசு முதலிய பால் கொடுக்கும் கால் நடைகளை வதை செய்வது தடுக்கப்பட வேண்டும்.

(16) நாட்டின் கலைச் செல்வங்களையும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களையும் பாதுகாக்கச் சட்டங்கள் இயற்ற வேண்டும்.

(17) நீதி பரிபாலனம் நிர்வாகத்திலிருந்து பிரிக்கப்பட வேண்டும்.

(18) மற்றத் தேசங்களுடன் அமைதியுடனும் பந்தோபஸ்துடனும் வாழ வேண்டும். அவர்களுடன் நல்லுறவு வைத்துக் கொள்ள வேண்டும். நாடுகளுக்கிடையே ஏற்படும் சண்டை சச்சரவுகளைச் சமாதான முறையில் தீர்த்துக் கொள்பவரை ஆதரிக்க வேண்டும்.

# அரசாங்க சின்னங்களையும் பெயர்களையும் தொழில் அல்லது வியாபார சம்பந்தமாய், தகாத முறையில், உபயோகிப்பதைத் தடுக்கும் சட்டம்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் இயற்றப்பட்ட 1950 ஆம் வருடத்திய 12 ஆவது சட்டம். 1—3—1950ல் சட்டமாயிற்று.]

ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் தனித் தனி கொடி, அதிகார முத்திரை பட்டயம் முதலியவை உண்டு. இந்தியக் குடியரசுக்கு ஒரு மூவர்ண தேசியக்கொடி உண்டு. அசோக சக்கரம் என்பது இந்திய அரசாங்கத்தின் ராஜ சின்னம். அது போலவே ஒவ்வொரு ராஜ்ய (மாகாண சர்க்காரும்) வெவ்வேறு அரசாங்க சின்னங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்திய தேசியக் கொடியையும் கீழே விவரிக்கப் பட்டிருக்கும் அசோக சக்கரம் முதலிய அரசாங்க சின்னங்களையும், மத்திய சர்க்காருடைய அனுமதியின்றி எவரும் எந்தத் தொழில் அல்லது வியாபாரத்திலும் உபயோகப்படுத்துவதை இச் சட்டம் தடை செய்கின்றது. இவைகளின் பெயரையும் உபயோகப்படுத்தக் கூடாது; இவைகளைப்போல் இருக்கும் படங்களையும் உபயோகப்படுத்தக் கூடாது. இவ்விதப் பெயர்களைக் கொண்ட கம்பெனிகளையும், கூட்டு வியாபாரங்களையும், வணிகக் குறிகளையும் ( Trade Marks ) இதற்கான அதிகாரிகள் பதிவு (ரிஜிஸ்டர்) செய்ய மாட்டார்கள். இவ்வித அதிகாரிகளுக்கு எந்தப் பெயராவது அல்லது சின்னமாவது இச் சட்டத்திலே தடுக்கப்பட்டதா அல்லவா என்று சந்தேகம் தோன்றினால் அவர் மத்திய சர்க்காரைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இச்சட்டத்தை மீறுவது குற்றமாகும். ரூபாய் 500 வரை அபராதம் விதிக்கப்படலாம். இச்சட்டம் எந்தத் தேதி முதல் அமுலுக்கு வருமென்று மத்திய சர்க்கார் விளம்பரம் செய்வார்கள்.

எந்தெந்தப் பெயர்களையும் சின்னங்களையும் மேற்கண்ட விதம் உபயோகப்படுத்தக் கூடாதென்று சட்டத்தில் ஜாபிதா கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஜாபிதாவில் இன்னும் சிலவற்றைச் சேர்க்கவும் மாற்றவும் மத்திய சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

ஜாப்தா:- (1) ஐக்கிய தேச சங்கத்தின் பெயர், சின்னம் அதிகார முத்திரை. (2) உலக சுகாதார சங்கத்தின் பெயர் சின்னம், அதிகார முத்திரை. (3) இந்திய தேசியக் கொடி. (4) இந்திய சர்க்கார் அல்லது ராஜ்ய சர்க்கார்களின் அதிகார முத்திரை, சின்னம், விருதுகள், பட்டயங்கள் முதலியவை.

# இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திருத்தம்

யுத்த காலத்தில் அமுலில் இருந்த பல வகை கட்டுப்பாடுகளை யுத்தம் முடிந்த பிறகும் கொஞ்ச காலம் வரை நீடிக்கப் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. அவைகளில் 1947 ஆம் வருடத்திய 18 ஆவது சட்டமாகிய இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமும் ஒன்று. அச் சட்டம் 25—3—1950 வரையில் தான் அமுலில் இருக்குமென்று அச் சட்டத்திலேயே காணப்பட்டிருந்தது. இத்திருத்தச் சட்டத்தால் இந்தக்கெடு 31—3—1955 வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இந்தியாவிற்குள் இறக்குமதி செய்யக்கூடிய சாமான்களைப்பொறுத்தும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய சாமான்களைப் பொறுத்தும் நிபந்தனைகள் ஏற்படுத்தவும் தடுக்கவும் வேறு விதமான கட்டுப்பாடுகள் ஏற்படுத்தவும் மத்திய சர்க்காருக்கு 31—3—1955 வரை அதிகாரமுண்டு. இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்காக லைசென்சு வேண்டுமென்று செய்யப்படும் மனுக்களுக்கு ஒரு கட்டணம் விதிக்கவும் மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுத்து, ஒரு புது ஷரத்தும் இத்திருத்தச் சட்டத்தால் சேர்க்கப்பட்டிருக்கிறது. இத்திருத்தச் சட்டம் 1950ஆம் வருடத்திய 6 ஆவது (மத்திய) சட்டம். 27—2—1950ல் அமுலுக்கு வந்தது.

# திவாலா (இன்சால்வென்சி) சட்டத்திருத்தம்

கடன் கொடுக்கச் சக்தியற்றவர்களைக் குறித்து இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. சென்னை, பம்பாய், கல்கத்தா இம் மூன்று தலைநகரங்களிலும் அமுலில் இருக்கும் சட்டம் ஒன்று. இதற்குத் தலைநகர திவாலா சட்டம் (Presidency—Towns Insolvency Act III of 1909) என்று பெயர். மற்றொன்று இந்தியாவின் மற்ற இடங்களில் அமுலில் இருக்கும் மாகாண திவாலா சட்டம் (Provincial Insolvency Act V of 1920)

தமது கடன்களைக் கொடுக்கச் சக்தியற்வரை 'திவால்' (Insolvent) என்று நிர்ணயம் (adjudicate) செய்ய வேண்டுமென்று கோர்ட்டில் மனுச் செய்து கொள்ளலாம். கடன் வாங்கியவரே 'எனக்குக் கடன் கொடுக்கச் சக்தி இல்லை' என்று சொல்லி, தம்மைத் திவால் என்று நிர்ணயம் செய்ய வேண்டுமென்று தாமே மனுக் கொடுக்கலாம். கடன் கொடுத்தவரும் தம்மிடம் கடன் வாங்கியவரை, 'திவால்' என்று நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கோரி கோர்ட்டில் மனுக் கொடுக்கலாம். ஆனால் கடன் கொடுத்தவர் இவ்விதம் மனுக்கொடுக்கச் சில சந்தர்ப்பங்களில் தான் முடியும். சில நிபந்தனைகளும் உண்டு. அதாவது இவ்விதம் மனுக் கொடுப்பவர்களுக்குச் சேர வேண்டிய கடன் தொகை ரூ 500க்குக் குறையாமல் இருக்க வேண்டும்; உடனே நிர்ணயிக்கக் கூடிய தொகையாகவும் இருக்க வேண்டும். இது மட்டில் போதாது. கடன் வாங்கியவர் கீழே கண்டபடி செய்திருந்தால் மட்டில் இவ்விதம் அவரைத் திவாலாக்கக் கடன் கொடுத்தவர் மனுச் செய்யலாம். அதாவது

(1) கடன் வாங்கியவர் கடன் கொடுத்தவர்களின் நன்மைக்காகத் தம்முடைய சொத்துக்களை மூன்றும் மனிதருக்கு மாற்றினாலும்.

(2) கடன் கொடுத்தவர்களை மோசம் செய்யவோ அவர்கள் கடனை வசூல் செய்வதைத் தாமதம் செய்யவோ தம்முடைய சொத்துக்களை வேறு ஒருவருக்குப் பராதீனம் செய்தாலும்

(3) கடன் கொடுத்தவர்கள் பலர் இருக்கும் போது அவர்களில் தமக்கு வேண்டியவருக்கு மட்டில் வேண்டுமென்று தம்முடைய சொத்தைக் கடனாளி பராதீனம் செய்தாலும்

(4) கடன் கொடுத்தவர்களை மோசம் செய்யவோ, அவர்கள் வசூல் செய்வதைத் தாமதப்படுத்தவோ, இந்தியாவை விட்டுக் கடனாளி வெளியே போனாலும், தம்முடைய வீட்டை விட்டோ தொழில் நடத்தும் இடத்தை விட்டோ புறப்பட்டுப் போய் விட்டாலும், தலை மறைவாக இருந்தாலும், கடன் கொடுத்தவர்கள் தம்முடன் பேச்சு வார்த்தை அல்லது கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ள முடியாதபடி ஒளிந்து கொண்டிருந்தாலும்

(5) கடனாளியின் சொத்து கோர்ட் வலத்தில் போனாலும் (21 நாட்கள் ஜப்தியிலிருந்தாலும் தலை நகரங்களில் போதும்)

(6) தாமே தம்மைத் திவால் என்று ஆக்கிக் கொள்ள மனுப் போட்டாலும்

(7) கடனாளி தம்முடைய கடன்களைத் திருப்பிக் கொடுப்பதை நிறுத்திக் கொண்டதாகவோ, நிறுத்திக் கொள்ளப் போவதாகவோ கடன் கொடுத்தவர்களுக்கு அறிவித்தாலும்

(8) டிக்ரிக் கடனுக்காகக் கடனாளி ஜெயிலுக்கு அனுப்பப்பட்டாலும்

இச்சந்தர்ப்பங்கள் அல்லது இவைகளில் ஏதாவது ஒன்றுவது ஏற்பட்டிருந்தால் தான் கடன் கொடுத்தவர் மனுக் கொடுக்க முடியும். இச்சந்தர்ப்பங்களுக்கும் செய்கைகளுக்கும் சட்டத்தில் 'திவால் செய்கை' என்று பெயர். ஆங்கிலத்தில் 'Acts of Insolvency' என்பது. கடன் கொடுத்தவர் மனுக் கொடுத்தால் அம்மனுக் கொடுத்த தேதிக்கு முன் உள்ள மூன்று

மாதங்களுக்குள் மேற்கண்ட 'திவால் செய்கைகள்' (acts of insolvency) ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படிக்கில்லா விட்டால் மனுவைத் தள்ளி விடுவார்கள். மேற்கண்ட மூன்று மாத கெடு முடிவடையும் தினத்தன்று கோர்ட் விடுமுறை தினமாக இருந்து மூடப்பட்டிருந்தால் கோர்ட் திறக்கும் தினத்தன்று மனுக் கொடுத்தால் போதுமா, போதாதா என்ற சந்தேகங்கள் இருந்தன. காலாவதிச் சட்டப்படி கோர்ட் மூடப்பட்டிருக்கும் தினத்தன்று கொடுக்க வேண்டிய பிராது மனு முதலியவற்றைக் கோர்ட் திறக்கும் தினத்தன்று தாக்கல் செய்தால் போதுமென்று இருக்கிறது. ஆனால் திவாலா சட்டத்தின் வாசகம் அப்படி இல்லாததினால் குழப்பம் ஏற்பட்டது. இப்பொழுது இத்திருத்தச் சட்டத்தால் இவ்விஷயம் தெளிவு படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது கடன் வாங்கியவரின் திவால் செய்கைகள் (acts of insolvency) ஏற்பட்டு அதிலிருந்து மூன்று மாத கெடுவானது கோர்ட் விடுமுறை தினத்தன்று முடிந்தாலும், கோர்ட் திறக்கும் தினம் மனு தாக்கல் செய்தால் போதுமென்று இரண்டு சட்டங்களிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இத்திருத்தச் சட்டத்தால் இன்னும் சில விஷயங்களும் மாற்றப்பட்டிருக்கின்றன. தலை நகர திவாலா சட்டத்தின் 21ஆவது பிரிவில் கடனாளியை, 'திவால்' என்று 'நிர்ணயம்' (adjudication) செய்யப்பட்டிருந்தாலும் அவரை அவ்விதம் நிர்ணயம் செய்திருக்கக்கூடாதென்று நீதிபதிக்குத் தோன்றினாலும், அல்லது திவாலாக்கப்பட்டவரின் கடன்கள் எல்லாம் பூராவாகக் கொடுக்கப்பட்டு விட்டாலும் திவால் நிர்ணய உத்தரவை (order of adjudication) நீதிபதி ரத்துசெய்யலாம் என்பதை மாற்றி, இச்சந்தர்ப்பங்களில் நீதிபதி அவ்வுத்திரவைக் கட்டாயமாக 'ரத்து செய்தாக வேண்டும்' என்று திருத்தப்பட்டிருக்கிறது.

தலைநகர திவாலா சட்டத்தின் 53ஆவது பிரிவின்படி திவாலாக்கப்பட்டவர் மீது ஒருவர் வாங்கி இருக்கும் டிக்ரியை நிறைவேற்றி, திவால் நிர்ணயத் தேதிக்கு முன், திவாலாக்க மனுக் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயம் தெரியாமல், தொகை வசூல் செய்து விட்டால் டிக்ரிக்காரரே அத்தொகையை அடையலாம் என்று இருந்தது. இப்பொழுது இது மாற்றப்பட்டிருக்கிறது. திவால் நிர்ணயம் (order of adjudication) ஏற்படும் முன்பே, டிக்ரிக்காரருக்குத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் கடனாளியைத் திவாலாக்க வேண்டுமென்று கோர்ட்டில் மனு ஏற்றுக் கொள்ளப்பட்ட (தாக்கல் செய்த) தேதிக்குப் பிறகு ஒரு டிக்ரிக்காக வசூல் செய்யப்படும் தொகைகளும் அபிஷியல் அசைனியைச் சேரும். எல்லாக் கடன்காரர்களுக்கும் கொடுக்க வேண்டிய தொகைகளுடன் சேரும். மற்றொரு திருத்தம். திவாலா சட்டப்படி ஒரு கடனாளி திவால் என்று நிர்ணயிக்கப்பட்டவுடன் (அதாவது order of adjudication ஏற்பட்டவுடன்) கடனாளியின் சொத்துக்கள் யாவும் அபிஷியல் அசைனி என்ற உத்தியோகஸ்தரிடம் சேரும். இச்சட்டப்படி அவைகள் எல்லாக் கடன்காரர்களுக்கும் விதாசாரமாகக் கொடுக்கப்பட வேண்டியவை ஆகும். கடன் கொடுத்தவர்கள் ஒருவரும் திவாலின் சொத்துக்களின் பேரில் தொடர முடியாது. கோர்ட்டின் அனுமதியின்றி, திவாலின் மீது யாரும் தாவா முதலிய எந்த நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ள முடியாது. (இவ்விதி பெந்தகம் ஜாமீன் முதலிய அடமானம் பெற்ற கடன்காரர்களுக்குக் கிடையாது. அவர்கள் தாவா செய்யலாம்.) ஆனால் சில சந்தர்ப்பங்களில் திவால் நிர்ணய உத்தரவு (order of adjudication) ரத்து செய்யப்படலாம். அப்பொழுது கடன் கொடுத்தவர்கள் மறுபடியும் கடனாளியின் மீது தாவா முதலிய தொடர வேண்டியதாக இருக்கும். அப்படிச் செய்ய வேண்டிய பொழுது அவர்கள் எடுத்துக் கொள்ளக் கூடிய நடவடிக்கைகளுக்குக் காலாவதி காலத்தை எப்படி கணக்குச் செய்ய வேண்டுமென்று விளக்கி 101 A என்று ஒரு புதுப் பிரிவு சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படி திவால் நிர்ணய உத்தரவு தேதியிலிருந்து

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)




[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட்டிலும் பல மாகாணங்களிலுள்ள ஹைகோர்ட்டுகளிலும் சமீபத்தில் நடந்த வழக்குகளில் உயர் நீதிபதிகளால் அளிக்கப்பட்ட சில தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை நமது நேயர்கள் வாசிக்கலாம். அடிப்படையான சட்ட தத்துவங்களை விளக்கும் இங்கிலாந்திலுள்ள நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் இங்கே காணலாம். தொழிற்சாலைகள் சட்டம், ஷாப் சட்டம் இவைகளின்படி முடிவான தீர்ப்பளிக்க அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் தீர்ப்புகளும் சேர்க்கப்படும்.]

## பசியால் ஏற்பட்ட கோபமே நான்கு கோரக் கொலைகளுக்குக் காரணம்.

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதிகள்; கனம் நீதிபதி கோவிந்த மேனன் அவர்களும், கனம் நீதிபதி பாஷீர் அஹமது அவர்களும்

ஆதாரம்: 63 லா வீக்லி 300

குற்றம் செய்பவர் ஏதோ ஒரு காரணமில்லாமல் அதைச் செய்வதில்லை. குற்றம் செய்யத் தூண்டுவது, குற்றம் செய்பவரின் மனநிலையே. அதுவும் பெரிய குற்றங்கள் செய்யப்பட்டால் நிச்சயமாக ஏதோ ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். பழிக்குப் பழி வாங்குவது, பொறாமை, பிறர் சொத்தை அடைய வேண்டும் என்பவை போன்ற காரணங்கள் இருக்கும். ஆனால் பசியினால் ஏற்பட்ட கோப ஆவேசமே நான்கு குழந்தைகளின் கோரக் கொலைக்கும், எட்டுப் பெயர்கள் அடைந்த பலத்த வெட்டுக் காயத்திற்கும் காரணமாக இருந்தது இவ்வழக்கில்.

குழந்தைத் தேவர் ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்தவர். உறவினர்களின் ஆதரவு இல்லை போலத் தோன்றுகிறது. சாப்பிடாமல் இவர் ஒரு நாள் மிகப் பசியுடன் இருந்தார். களைத்து வாடி இருக்கும் அச்சமயத்தில் எதிரில் வந்த ஒருவர் 'நீ யாரய்யா' என்று தான் கேட்டார். வேறொன்றும் நடக்கவில்லை. தேவர் உடனே கையிலிருந்த அரிவாளால் அப்படிக் கேட்டவரை ஒரு வெட்டு வெட்டி விட்டு, ஓட ஆரம்பித்தார். ஜனங்கள் துரத்தினர். ஓட்டம் பிடித்த அவர் அங்கிருந்த குழந்தைகளில் நான்கு குழந்தைகளை அரிவாளால் கோரமாகக் கொலை செய்து, மற்றும் சிலருக்கு வெட்டுக் காயமும் உண்டாக்கினார். உடனே நேராகப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய், கையிலிருந்த ரத்தம் ஒழுகிய அரிவாளையும் போலீசாரிடம் கொடுத்து, தாம் செய்த காரியங்களையும் ஒப்புக் கொண்டார். குற்றம் விசாரணைக்கு வந்து ராமநாதபுரம் செஷன்ஸ் ஜட்ஜும் குற்றவாளிக்குத் தூக்கு தண்டனை அளித்தார்.

ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜுகளால் தூக்குத் தண்டனை விதிக்கப்படும் வழக்குகளில், குற்றவாளி அப்பீல் செய்யாவிட்டால் கூட, அவ்வழக்கு ஹைகோர்ட்டுக்கு அனுப்பப்பட்டு உயர் நீதிபதிகளால் நன்கு பரிசீலனை செய்யப்பட்ட பிறகே தான் உறுதியாகும். தண்டனை அடைந்தவர் வக்கீல் வைக்காவிட்டால்கூட அவருடைய கட்சியை எடுத்துச் சொல்லக் கோர்ட்டாராலேயே ஒரு வக்கீல் நியமிக்கப்படுவார்.

பிரஸ்தாப வழக்கிலும் அப்படியே நேர்ந்தது. இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைப் பற்றிய சட்டத்தில் ஒரு விதிவிலக்கு (செக்ஷன் 84) இருக்கின்றது. அதாவது, குற்றம் செய்பவர் அச்சமயத்

187697

தில் சித்த சுவாதீனமில்லாமையால் தாம் என்ன செய்கிறோம் என்று தெரிந்து கொள்ளச் சக்தி அற்றவராக அல்லது தாம் செய்வது தவறு, சட்ட விரோதம் என்று தெரிந்து கொள்ள முடியாதவராக, இருந்தால் அவர் செய்யும் எச்செய்கையும் குற்றமாகாது என்று இருக்கின்றது. (இதைப்போல் இன்னும் பல பொது விதி விலக்குகள் இருக்கின்றன. அவைகளை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விவரிப்போம்)

இவ்வழக்கில், அர்த்தமற்ற இக்கோரக் கொலைகளைச் செய்தவரின் மனநிலை என்ன? அவர் அச்சமயத்தில் தாம் கொலை செய்வதாகத் தெரிந்து கொண்டு செய்தாரா? அல்லது தம்முடைய மனப் பிராந்தியால் ஏதோ சட்டிப்பானைகளை உடைப்பதாக நினைத்துக் கொண்டு இக்கோரக் கொலைகளைச் செய்தாரா என்ற விவாதம் ஹைகோர்ட்டில் நடந்தது. கொலை செய்தவர் உடனேயே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி எந்த ஆயுதத்தால் குற்றம் செய்தாரோ அந்த அரிவாளையும் அதிகாரிகளிடம் ஒப்படைத்தது என்ன காண்பிக்கின்றது? அவர் செய்த காரியம் தவறு, குற்றம், என்று உணர்ந்து தானே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். ஆகையால் சட்டத்தால் விதி விலக்கு அளிக்கக் கூடிய மனநிலை அவருக்கு இல்லை. எந்தக் கோபாவேசத்தால் இவர் கொலை செய்தாலும், தாம் செய்யும் காரியம் என்ன என்று உணர்ந்தே செய்தார் என்றும் இவர் குற்றவாளி தான் என்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

குற்றவாளி செய்த செய்கைகள் கோரமானவை; ஆனால் அர்த்தமற்றவை. இருந்தாலும் குற்றம் குற்றம் தான். தூக்குத் தண்டனை மாற்றப்பட்டு அவருக்கு ஆயுள் வரை தீபாந்தர தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றம் ருசுவானால் நீதிபதிகள் தண்டிக்க வேண்டியது தான். அவ்விதமே செய்தார்கள். ஆனால் குறிப்பிட்ட வழக்குகளில் இருக்கும் சந்தர்ப்பங்களை ஒட்டி, தண்டனையைப் பூராவாக வஜா செய்யவோ, குறைக்கவோ, சர்க்காருக்குச் சட்டத்தால் ஒரு அதிகாரம் இருக்கின்றது. அவ்வதிகாரத்தை இவ்வழக்கில் யுக்தமாகச் செலுத்துமாறு நீதிபதி அவர்கள் சர்க்காருக்குச் சிபார்சு செய்தனர்.

---

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அது ரத்தான தேதிவரை உள்ள காலத்தை நீக்கி, காலாவதி சட்டப்படி காலாவதி காலக் கணக்குச் செய்யலாம் என்று சேர்க்கப்பட்டிருக்கின்றது. ஆனால் திவாலா நடவடிக்கைகளில் தமது கடனை ருசுப்பிக்காத கடன்களுக்கு இச்சலுகை கிடையாது.

மாகாண திவாலா சட்டத்தின் 43ஆவது பிரிவில் ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. திவாலாக நிர்ணயம் செய்யப்பட்டவர், தம்மைக் கடனிலிருந்து நிவாரணம் செய்ய வேண்டுமென்று மனுக் கொடுக்கலாம். இதற்கு ஆங்கிலத்தில் டிஸ்சார்ஜ் 'Discharge' என்று பெயர். இவ்விதம் 'டிஸ்சார்ஜ்' செய்யப்பட்ட கடனாளி அவர் வாங்கி இருந்த கடன் பிடிப்பிலிருந்து விடுதலை அடைகின்றார். அதற்குப் பின் அவர் என்ன சொத்துக்கள் சம்பாதித்தாலும் முன் வாங்கிய கடன்காரர்கள் அதில் கைவைக்க முடியாது. அவர்களுக்கும் 'டிஸ்சார்ஜ்' பெற்ற கடனாளியின் புது சம்பாத்தியங்களுக்கும் சம்பந்தமில்லை என்பது பொது விதி. சில விதி விலக்குகளும் உண்டு. 'டிஸ்சார்ஜ்' என்பது எந்தச் சந்தர்ப்பங்களில் அளிக்கப்பட வேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. 'டிஸ்சார்ஜ்' பெறக் கோர்ட்டில் குறிப்பிடப்படும் காலத்திற்குள் திவாலாக்கப்பட்டவர் மனுப் போட வேண்டும். உரிய காலத்திற்குள் 'டிஸ்சார்ஜ்' மனுக் கொடுக்காவிட்டாலும், அல்லது அம்மனுவின் விசாரணைக் காலங்களில் கடனாளி கோர்ட்டில் ஆஜராகாமலிருந்தாலும் திவால் நிர்ணய உத்தரவை (அட்ஜூடிகேஷன் ஆர்டரை) கோர்ட்டார் 'கட்டாயமாக ரத்து செய்ய வேண்டு'மென்று இருந்தது, இப்பொழுது திருத்தப்பட்டு, 'கோர்ட்டார் ரத்து செய்தாலும் செய்யலாம்; அல்லது வேறு யுக்தமான உத்தரவுகளும் செய்யலாம்' என்று திருத்தப்பட்டிருக்கிறது.

## உயில் எழுதி வைத்தவருடைய எண்ணம் பலிக்கவில்லை.

**கோர்ட்:** பிரிவி கௌன்சில்

**நீதிபதிகள்:** ஸர் லையோனல் லீச் இன்னும் நான்கு நீதிபதிகள்

**ஆதாரம்:** 1950-1-மதராஸ் லா ஜர்னல் 300

மீனுட்சி சுந்தரம் பிள்ளை சர்க்கார் உத்தியோகத்திலிருந்து கடைசியில் டிப்டி கலெக்டராக இருந்தார். அவருக்கு உடம்பில் ஒரு பிளவை ஏற்பட்டு மதுரை ஆஸ்பத்திரியில் ரண சிகிச்சை செய்து கொண்டு ஆஸ்பத்திரியிலேயே 1919ஆம் வருடம் மே மாதம் இறந்தார். இறப்பதற்கு முதல் நாள் ஒரு மரண சாசனம் (உயில்-Will) எழுதி வைத்தார். அம்மரண சாசனத்தின் வாசகம் பின் வருமாறு:

"நான் இப்பொழுது மதுரை ஆஸ்பத்திரியில் இருக்கிறேன். பிளவைக்காக ஆபரேஷன் செய்து கொண்டேன். இனி நான் பிழைக்க மாட்டேன் என்று எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய எல்லாச் சொத்துக்களையும் பணம் வகையராவையும் என் மகன் பிச்சைப் பிள்ளைக்குக் கொடுத்து விட்டேன். அவன் அச்சொத்துக்களை ஏகதேசமாய் அடைய வேண்டியது. அவனுக்காவது அல்லது அவனுடைய மகனுக்காவது குழந்தைகளே இல்லாவிட்டால் மேற்படி சொத்துக்கள் எல்லாம் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியைச் சேரும்" என்று எழுதி வைத்தார். உயில் எழுதிய மறு தினமே மீனுட்சி சுந்தரம் பிள்ளை இறந்தார்.

அவர் இறந்தவுடன் அவருடைய மகன் பிச்சைப் பிள்ளை அவருடைய எல்லாச் சொத்துக்களையும் அடைந்து அனுபவித்து வந்தார். பிச்சைப் பிள்ளைக்குக் குழந்தைகள் இல்லை. அவரும் 1927ல் இறந்தார்.

பிச்சைப் பிள்ளை இறந்தவுடன் அவருடைய அனந்தர வார்சுகள் சொத்துக்களைச் சுவாதீனம் செய்து கொண்டனர். பிச்சைப் பிள்ளை குழந்தை இல்லாமல் இறந்து போனுல் சொத்துக்கள் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலைச் சேருமென்றல்லவா உயிலில் இருக்கிறது? அதை ஆதாரமாகக் கொண்டு கோயிலார் எல்லாச் சொத்துக்களும் கோயிலுக்குச் சேர வேண்டுமென்று மதுரை சப் கோர்ட்டில் தாவா தொடங்கினர். சப் கோர்ட், ஹைகோர்ட், கடைசியில் லண்டனிலுள்ள பிரிவிகவுன்சில் மூன்று கோர்ட்டுகளிலும் கோயிலுக்குப் பாதகமாகவே வழக்கு முடிந்தது. உயிலின் ஷரத்துக்களை எப்படி அர்த்தம் செய்ய வேண்டுமென்று பிரிவிகவுன்சில் தீர்ப்பில் விளக்கப்பட்டிருக்கிறது.

மீனுட்சி சுந்தரம் பிள்ளையின் உயிலில் எல்லாச் சொத்துக்களும் யாதொரு விதமான நிபந்தனைகளில்லாமல் முதலில் தமது மகன் பிச்சைப் பிள்ளைக்கே சர்வ சுதந்தரமாய்க் கொடுக்கப்பட்டு விட்டபடியால் அச்சொத்துக்கள் பிச்சைப் பிள்ளையின் சொத்துக்களாகி விட்டன என்றும், அவருக்குக் குழந்தைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சொத்துக்கள் எல்லாம் பிச்சைப் பிள்ளைக்குச் சர்வ சுதந்தரமுள்ளவையாதலால் அவர் இறந்தவுடன் அவருடைய வார்சுகளைத்தான் சேரும் என்றும் அவர் தகப்பனுருடைய உயிலில் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குக் கொடுத்திருக்கும் பிந்திய ஷரத்து செல்லாதென்றும் அபிப்பிராயப்பட்டு அதை அனுசரித்துத் தீர்ப்பளித்தனர்.

## புருடன் இறந்து 55 வருடங்களுக்குப் பின் அவருடைய விதவை எடுத்துக் கொண்ட சுவீகார மகனுக்குச் சொத்தில் சரிபாதி பாகம் கிடைத்தது

**கோர்ட்:** பிரிவிகவுன்சில்

**நீதிபதிகள்:** நீதிபதி லார்ட் சைமண்ட்ஸ், இன்னும் இரு நீதிபதிகள்

**ஆதாரம்:** 1950-1-மதராஸ் லா ஜர்னல். 288

ஹிந்துக்களுடைய சட்டத்தில் 'சுவீகாரம்' அல்லது 'தத்து' என்ற விஷயத்தைப் பற்றிய சட்டப் பிரச்னைகள் பல. மகனில்லாத ஒரு ஹிந்து, தாம் உயிருடன் இருக்கும் போதே ஒரு மகனைச் சுவீகாரம்

செய்து கொள்ளலாம். அவ்விதம் சுவீகாரம் செய்து கொள்ளப்பட்ட மகனுக்கு, சொந்த மகனைப் போலவே, எல்லா உரிமைகளும் பாத்தியங்களும் உண்டு. ஆனால் குழந்தை இல்லாமல் இறந்தவருடைய விதவை எடுத்துக் கொள்ளும் சுவீகாரத்தைப் பற்றித் தான் சட்டத்தில் குழப்பமான மூலை முடுக்குகள் இருந்தன. ஒரு விதவை தாமாகவே சுவீகாரம் எடுத்துக் கொள்ள உரிமை உண்டா? யாருடைய அனுமதியாவது வேண்டுமா? அப்படி வேண்டுமானால் யாருடைய அனுமதி போதும்? அனுமதி வேண்டுமென்று கேட்கப்பட்ட பங்காளி அனுமதி கொடுக்கமாட்டேன் என்று மறுக்கலாமா? எக்காரணங்களினால் மறுக்கலாம்? புருடன் இறந்து எவ்வளவு காலத்திற்குள் அவருடைய விதவை சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம்? அப்படி சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் போது சொத்துக்கள் பல கைமாறிப் போய் இருந்தால் அதைத் திரும்ப அடைய, சுவீகார மகனுக்கு உரிமை உண்டா? இதைப் போல் நூற்றுக்கணக்கான பிரச்னைகள் ஏற்படுகின்றன. இவ்விஷயங்களில் பார்லிமெண்ட் முதலிய சட்ட சபைகளால் இதுவரை யாதொரு சட்டங்களும் ஏற்படுத்தவில்லை யாதலால், உயர்நீதி மன்றங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் வழக்குகளில், நீதிபதிகள் சொல்லும் அபிப்பிராயமே தான் சட்டம்.

பிரஸ்தாப வழக்கு பம்பாய் மாகாணத்தில் ஏற்பட்டு பிரிவுகவுன்சில் வரை போயிற்று. சென்னையில் விதவை சுவீகாரம் எடுத்துக் கொள்வதானால் புருடனுடைய அனுமதி இருந்திருக்க வேண்டும்; அல்லது பங்காளிகளின் அனுமதி வேண்டும். பம்பாயில் இவ்வித அனுமதியின்றியே ஒரு விதவை சுவீகாரம் செய்து கொள்ளலாம். இந்த வித்தியாசத்தைத் தவிர மற்ற முக்கிய அம்சங்களில் இரண்டு இடங்களிலும் ஒரே சட்டம் தான்.

இவ்வழக்கைக் கவனிப்போம். மூன்று சகோதரர்கள் ஒரேகுடும்பமாக இருந்தனர். குழந்தையில்லாமல் ஒருவர் இறந்து விட்டார். அவரைப் பற்றி இவ்வழக்கு சம்பந்தப்பட்ட வரை நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுமில்லை. மற்ற இரண்டு சகோதரர்களில் முதல் சகோதரர் 1872ல் இறந்தார். (வருடங்களைக் கவனிக்கவும்) அவருக்கு ஒரு மகன் இருந்து அவரும் 1878ல் இறந்தார். இவருக்குக் குழந்தைகள் இல்லை. மனைவி மட்டில் இருந்தாள். இப்பொழுது குடும்பச் சொத்துக்கள் யாவும் இரண்டாவது சகோதரரைச் சேர்ந்து அவரும் 1898ல் இறந்தார். அவருக்கும் ஒரு மகன் உண்டு. அம்மகன் 1918ல் குழந்தையில்லாமல் இறந்தார். அவருடைய மனைவி 1922ல் எல்லப்பா என்பவரை ஒரு விதவா சுவீகாரம் செய்து கொண்டாள். 1922 முதல் இக்குடும்பச் சொத்துக்கள் யாவற்றையும் எல்லப்பாவே ஏகதேசமாய் அடைந்து அனுபவித்து வந்தார்.

இப்படி இருக்கும் போது முதல் சகோதரருடைய மகன் 1878ல் இறந்ததாகச் சொன்னோமே, அவருடைய விதவை, தம் புருடன் இறந்து 55 வருடங்கள் சென்ற பிறகு 1933ல் பாஸன் என்ற பையனைச் சுவீகாரம் எடுத்துக் கொண்டாள். இச் சுவீகார மகன் குடும்பச் சொத்துக்களில் தமக்குச் சரிபாதி வீதம் கிடைக்க வேண்டுமென்று எல்லப்பாவின் பேரில் தாவா செய்தான். சப் கோர்ட்டில் அவனுக்குச் சாதகமாயிற்று. பம்பாய் ஹைகோர்ட்டார் அவனுக்குப் பாத்தியமில்லை என்று சொல்லிவிட்டனர். ஏனென்றால் அவிபக்த குடும்பமென்பதே போய் விட்டதென்றும் அது போன பிறகு தோன்றும் சுவீகார புத்திரர்களுக்குக் குடும்பச் சொத்தில் உரிமை இல்லை என்றும் தீர்ப்பளித்தனர். சுவீகார மகன் லண்டனிலிருக்கும் பிரிவிகவுன்சி

(தொடர்ச்சி அடுத்த பக்கம் கீழே)

**பிழை திருத்தம்:** *1950* "வக்கீல்" ஏப்ரல் இதழ் பக்கம் *12*-ல் வழக்கும் தீர்ப்பும் என்ற தலைப்பில் 'பஞ்சாயத்தார்கள் முன்" என்று ஆரம்பிக்கும் வழக்கில் 10-ஆவது வரியில் '499-ஆவது பிரிவு' என்று திருத்தி வாசிக்கவும்.



# கேள்வியும் - பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

நேரில் பதில் கிடைக்க - அடுத்த பக்கம் பார்க்கவும்.

**கேள்வி:** (L 2658 கந்தசாமி செட்டியார், பவானி) மாஸ்டர் வீவர்கள் நூல் வியாபாரிகளாகக் கருதப் படுவதால், அரை வருடத்திற்கு லைசென்சு கட்டணம் ரூ. 50 செலுத்தினால் போதுமா? அத்துடன் நூல் வியாபாரிகளைப் போல் டிபாசிட் ரூ. 500 செலுத்தவேண்டுமா? மாஸ்டர் வீவர்கள் ஒவ்வொரு மாதமும் ரிடர்ன் அனுப்ப வேண்டுமா?

**பதில்:** எல்லா நூல் வியாபாரிகளுக்கும் உள்ள சட்டம் தான் இப்பொழுது மாஸ்டர் வீவர்களுக்கும். இவர்களும் திருத்த விதிப்படி நூல் வியாபாரிகளாகக் கருதப்படுவார்கள்.

**கேள்வி:** (L 2660 வேங்கடாசல முதலியார், பழனி) ஒரு ஹிந்து குடும்பத்தில் பிறந்தவர் கிருஸ்துவ மதத்தில் சேர்ந்து, அம்மத சம்பிரதாயப்படி கலியாணம் செய்து கொண்டு ஆண் பெண் மக்களுடன் குடும்பத்தை நடத்தி வருகிறார். ஷை யாருக்குப்பிதுரார்ஜித சொத்துக்கள் இருக்கின்றன. அதில் பிள்ளைகளுக்குப் பாத்தியமுண்டா? பிள்ளைகளின் சம்மதமில்லாமல் ஷை சொத்தைத் தகப்பன் வினியோகம் செய்தால் செல்லுமா?

**பதில்:** கிருஸ்தவ மதத்தைத் தழுவியவுடன் அவர் அவிபக்த குடும்பத்தை விட்டு சட்டப்படி பிரிபட்டவராகிறார். அத்தேதியில் அவருக்குள்ள பாகத்திற்குத் தனி உரிமையாளராவார். கிருஸ்தவரான பிறகு அவருக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அவருடைய பாக சொத்தில், அவர் உயிருடன் இருக்கும் வரை, பாத்தியமில்லை. அப்பிள்ளைகளின் சம்மதமில்லாமலே அவர் தம் சொத்தை விற்கலாம்.

**கேள்வி:** (L 2662 அப்துல் ஹமீது, கூத்தாநல்லூர்) ஷாப் சட்டம் அமுலில் இருக்கும் இடங்களில் உள்ள சங்கங்களிலும்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

லுக்கு அப்பீல் செய்தார். இவ்வப்பீல் விசாரணைக்கு வருமுன்பே வேறு ஒரு வழக்கில் இதே விஷயத்தைப்பற்றி, பிரிவுகவுன்சிலார் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லியிருந்தனர். (56 லா வீக்லி 749 என்ற கேசில்) அதை அனுசரித்து, சுவீகாரம் புருடன் இறந்து 55 வருடங்கள் சென்ற பிறகு ஏற்பட்டிருந்தாலும், அதற்கிடையில் குடும்பத்தில் எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருந்தாலும் பாதகமில்லை; குடும்பம் என்பதே மறைந்து போய்விட்டாலும் பாதகமில்லை; சுவீகார மகனுக்குச் சரிபாதி சொத்தை அடைய உரிமை உண்டென்று அபிப்பிராயப்பட்டு சொத்துக்களில் சமபாதிக்குத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சபைகளிலும் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு ஷாப் சட்டப்படி விடுமுறை நாட்களும் வேலை நேரமும் உண்டா?

**பதில்:** ஷாப் சட்டத்தின் 7, 13, செக்ஷன்கள் மட்டில் (வியாபார ஸ்தாபனமல்லாத) சங்கங்களுக்கு (clubs) இல்லை. அதாவது தினசரி திறந்து மூடவேண்டிய நேரங்கள் இல்லை. மற்ற விதிகள் உண்டு. (ஷாப் சட்டம் செக்ஷன் 4 (2) (c) பார்க்கவும்.

**கேள்வி:** (L 2662 சீனிமரக்காயர், பாம்பன்.) ஒரு காலி நிலத்தை வாடகைக்கு ஒப்புக்கொண்டு அனுபவித்து வருகையில் இரண்டு வருடம் கழித்து வாடகையைப் பத்து மடங்கு உயர்த்த முடியுமா?

**பதில்:** ஏதாவது ஒப்பந்தமிருந்தால் ஒழிய, சொந்தக்காரர் தம் இஷ்டமாக மட்டில் வாடகையை உயர்த்த முடியாது. ஆனல் வாடகைப் பாத்தியத்தைச் சட்டப்படி முடிவு செய்து, வாடகைக்கு ஒப்புக்கொண்டவரை நிலத்தைக் காலி செய்யும்படி சிவில் கோர்ட்டுகளில் நடவடிக்கைகள் எடுக்கலாம். காலி நிலங்களுக்கு ஜாகை வாடகைக்கட்டுப்பாடு சட்டம் உதவாது.

**கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க**

"வக்கீல்" பத்திரிகையில் வரிசைக்கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்யேகமாகத் தபால்மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை ரிஜிஸ்டர் தபால் மூலம் காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும் ரூபாய் ஒன்றுக்கு தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்ப வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

**கேள்வி:** (L 2664 நாராயணன்) விபசாரத்தடை சட்டத்தின் முக்கிய ஷரத்துக்கள் என்ன?

**பதில்:** விபசாரத்தடைச்சட்டம் என்பது சென்னை 1930-ஆம் வருடத்திய 5-ஆவது சட்டம். இச்சட்டப்படி குற்றங்கள்:— (1) விபசார விடுதிகளை வைத்திருப்பது, நிர்வகிப்பது, அதற்கு உதவி செய்வது. (2) ஒரு கட்டடத்தின் வாடகைக்காரர் அதை விபசாரத்தொழிலுக்காக உபயோகப்படுத்தும்படி விடுவது. (3) கட்டடத்தின் சொந்தக்காரர் அதை இச் சட்டப்படி தண்டனை அடைந்த ஒருவருக்கு, தம் கட்டடம் விபாசாரத்தொழிலுக்காக உபயோகப்படுத்தப்படுமென்று தெரிந்தும் வாடகைக்கு விடுவது. (4) சென்னையிலும் முனிசிபல் டவுன்களிலும் ஒருவருடைய விபசாரத்திலிருந்து கிடைக்கும் வரும்படியைக்கொண்டு (பதினெட்டு வயது பூர்த்தியான) ஒருவர் ஜீவனம் செய்வது; விபசாரத் தொழில் செய்பவருடைய தயார், மகன், மகள் இதில் சேர்க்கப்படவில்லை. ஆனல் இவர்களும் விபசாரத்தொழிலுக்கு உதவி செய்வது குற்றமாகும். (5) ஒரு ஸ்திரீயை விபசாரத்தொழிலில் ஈடு படச்செய்யும் எண்ணத்துடன் அவளை ஓரிடமிருந்து வேறு இடத்திற்குக் கொண்டு போவது, அல்லது அவளை அதில் ஈடு படும்படி தூண்டுவது. (6) விபசார விடுதிகளுக்கு ஆள் சேர்த்து விடுவது. (7) தெருவில் அல்லது பொது ஸ்தலங்களில் விபசாரம் செய்ய அழைப்பது அல்லது அதற்காகத் தெருக்களில் வட்டமிடுவது. மேற்கண்டவை இச்சட்டப்படி முக்கிய குற்றங்களாகும்.

**கேள்வி:** (L 2666 சின்னதம்பி, ஈரோடு) ஒருவனுக்கு ஸ்தாவர சொத்து இருக்கும் போது, பாண்டின்பேரில் கடன் வாங்கி, கடனைக்காட்டாமல் சொத்தைக் கிரயம் செய்தால், கிரயம் செல்லுமா?

**பதில்:** சாதாரணமாய்ச் செல்லும். (ஆனல் சில சந்தர்ப்பங்களில் செல்லாமலும் போய் விடலாம். உதாரணமாக: கடன்காரர்களை ஏமாற்றவோ, ஜீவனாம்சம் அடையக்கூடியவர்களை ஏமாற்றவோ செய்யும் கிரய சாசனங்கள் செல்லாமல் போய்விடலாம்)

**கேள்வி:** (L 2667 கிருஷ்ணமாசாரி, மதுக்கூர்) ஒரு ஹிந்து குடும்பத்தில் தகப்பனுக்கும் பிள்ளைகளுக்கும் பாகமான பிறகு, தகப்பனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது, அவனும் (பிறகு) அந்த ஆண் குழந்தையும் இறந்து விட்டால், சொத்துரிமை அவன் மனைவிக்கு உண்டா?

பதில்: தகப்பன் இறந்தவுடன் அவருடைய பாக சொத்தும் அவருடைய சுயார்ஜித சொத்தும் சேர்ந்து பாகமான பிறகு பிறந்த ஆண் குழந்தைக்குப் பாதியும் மனைவிக்குப் பாதியும் கிடைக்கும். ஆண் குழந்தையும் இறந்த பிறகு அச்சொத்துக்களும் மனைவியைச் (இறந்த ஆண் குழந்தையின் தாயாரை) சேரும்.

கேள்வி: (L 2673 கணபதி, ஈரோடு) வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் என்பது குடி இருப்பு வீட்டுக்கு மட்டும்தானா; அல்லது வியாபாரம் செய்யும் கட்டடத்திற்கும் உண்டா?

பதில்: இச்சட்டம் அமுலில் இருக்கும் இடங்களில் இரண்டுக்கும் உண்டு. அமுல் இல்லாத இடங்களில் இரண்டுக்கும் இல்லை.

கேள்வி: (ஷை) புருடனுக்கு இரண்டு சம்சாரங்களிருந்து (அவருக்குப் பிறகு) முதல் சம்சாரத்தின் மகன் பெயரால் பட்டா நிலங்கள் இருக்கின்றன. இரண்டாவது சம்சாரத்திற்குக் குழந்தைகள் இல்லை. குடும்பம் ஒன்று. இரண்டாவது சம்சாரம் கொடுத்திருக்கும் கடன்களுக்கு விவசாய மசோதாப்படி வட்டி குறைவு உண்டா?

பதில்: இரண்டாவது சம்சாரத்தால் கொடுக்கப்பட்ட கடன் 1—10—1937ல் அவளுக்குச் சேர வேண்டிய கடனாக இருந்து, அந்தத் தேதியில் அக்கடன் அசல் தொகை உள்பட அவளுக்கு ரூ. 6000க்கு மேற்படாமல் சொத்துக்கள் இருந்தால், அவள் கொடுத்த கடனுக்கு வட்டிக் குறைவு ஏற்படாது. அப்படிக் கில்லாமற் போனால் அவள் விவசாயிகளுக்குக் கொடுக்கும் கடனுக்கு வட்டிக் குறைவு உண்டு.

கேள்வி: (L 2682 ராஜம் பிள்ளை, ஓகலூர்) பாகம் பிரியாத குடும்பத்தில் (ஆண் பிள்ளையில்லாத) ஒரு பாகஸ்தர் தம் பாகத்தைத் தம் மனைவிகளுக்கும் பெண்களுக்கும் தம் தமக்கை மகன்களுக்கும் செட்டில்மெண்ட் எழுதி வைத்தால் செல்லுமா?

பதில்: பாகம் பிரியாமல் இருக்கும் நிலைமையில் செல்லாது. ஆனால் இதற்கு மற்றப்பாகஸ்தர்களும் சம்மதித்துச் செல்லுபடியாக்கலாம்.

கேள்வி: (ஷை) பாகம் பிரியாத குடும்பத்தில் ஆண் பிள்ளை இல்லாத ஒருவர் இரண்டு சம்சாரங்களை விட்டு விட்டு இறந்து போனால் சம்சாரங்களுக்குச் சொத்துரிமை உண்டா? அல்லது ஜீவனாம்ச பாத்தியம்தானா? சொத்துரிமை இருந்தால் எந்தச் சம்சாரத்திற்கு?

பதில்: இரண்டு சம்சாரங்களுக்கும் சொத்துரிமை உண்டு. சாதாரணமாய் அவர்கள் ஆயுசு வரை புருடனுடைய சொத்தை அனுபவிக்கலாம். இருவரில் ஒருவர் இறந்தாலும் மற்றவர் தம் ஆயுள் வரை எல்லாச்சொத்துக்களையும் அனுபவிக்கலாம்.

கேள்வி: (L 2683 அய்யாத்துரை, கல்விராயம் பேட்டை) ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள ஏற்பாடு செய்து பத்துப் பெயர்களை வைத்துப் பேசி, பரிசம் செய்துவிட்டு, பின்னால் அப்பெண்ணை மணக்க முடியாதென்று சொன்னால் யார் என்ன செய்கிறது?

பதில்: பெண்ணோ பெண் வீட்டுக்காரர்களோ ஏமாற்றியவர்கள் பேரில் நஷ்ட ஈடு கிடைக்கத் தாவா செய்யலாம்.

கேள்வி: (L 2684 வீரமுத்து முதலியார், மோகனூர்) மாவடை, மரவடைகள் உள்ள ஒரு நிலத்தை, நிலத்தை மாத்திரம் கண்டு கோர்ட்டில் ஏலம் போட்டால், மாவடை மரவடை கட்டுப்படாதென்று சொல்ல முடியுமா?

பதில்: முடியாது.

கேள்வி: (L 2685 பொம்ம நாயக்கர், அழகாபுரி) ஒரு விவசாயி தம் கிராமப் பிளானையோ, கிஸ்தி சம்பந்தமான விஷயங்களையோ கேட்டு மேலதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக்கொண்டால் அதிகாரிகள் விவசாயிக்குத் தெளிவு படுத்தச்சட்டம் உண்டா? பல கடிதங்கள் எழுதியும் அதிகாரிகள் பதில் சொல்லாதிருந்தால் விவசாயி என்ன செய்ய வேண்டியது?

பதில்: விவசாயியாக இருந்தாலும் அவரும் சட்டப்படி செய்தால் தான் அதிகாரிகள் பேரில் புகார் செய்யலாம். கிராம நிலங்களின் பிளான் முதலியவை கிடைக்கச் சரியானபடி நகல் மனுப்போட்டு, கட்டணம் கட்டிக் கேட்கவேண்டும். அப்படியில்லாமல் எழுதும் சாதாரண கடிதங்களுக்கு அதிகாரி பதில் சொல்லவேண்டிய சட்டமில்லை. சட்டமில்லாவிட்டாலும், பல முன்னேற்றமடைந்த நாடுகளில் சர்க்கார் அதிகாரிகள் தங்களை மக்களின் ஊழியர்கள் என்று நினைத்து அவர்களிடமிருந்து வரும் புகார்களைத் துரிதமாகக்கவனித்து உடனுக்குடன் மரியாதையாகப் பதில் எழுதும் பழக்கமும், தெரியாதவர்களுக்கு வழிகாட்டும்தன்மையும் அவர்களிடம் இருக்கின்றது. நமது அதிகாரிகளும் பழைய வாசனையை மறந்து, தாங்களும் பொதுமக்களின் ஊழியர்கள்தான் என்ற மனப்பான்மையை அடைந்ததும் அவ்விதம் செய்வார்கள். அவசரப்படவேண்டாம்.

கேள்வி: (ஷை) ஒரு விவசாயி ஒரு நிலத்தை 30 வருடம் அனுபவித்து, பின், சொந்தக்காரன் எனக்குப் பட்டா இருக்கிறது என்று சொன்னால் எது ஊர்ஜிதமாகும்?

பதில்: சொந்தக்காரனுடையபாத்தியத்திற்கு விரோதமில்லாமல் (குத்தகை முதலிய எடுத்து) எவ்வளவு காலம் ஒரு விவசாயி பிறர் நிலத்தை அனுபவித்த போதிலும், சொந்தக்காரனுடைய பாத்தியம் தான் ஊர்ஜிதமாகும். அதாவது நிலம் சொந்தக்காரருடையதாகவே தான் இருக்கும்.

கேள்வி: (L 2701 சின்னைபா செட்டி) விற்பனை வரிச் சட்டப்படி ரூ. 6 கட்டி ரிஜிஸ்டர் செய்து கொண்ட வியாபாரி விற்பனைவரி வசூல் செய்யாமல் ரூ. 10,000-க்கு மேற்கொண்டு விற்பனை செய்து விட்டால் வியாபாரி தானே சொந்தப் பணத்தைக் கொண்டு வரி கட்ட வேண்டும்?

பதில்: ஆம்.



கேள்வி: (L 2704 கோவிந்தசாமி, தாராபுரம்) 1946ல் ஒரு சொத்தை ஒரு ஸ்திரீக்கு ரூ. 2000க்கு போக்கியம் வைக்கப்பட்டு, 28-7-1947ல் ஷை சொத்தையும் வேறு சொத்தையும் ஷை ஸ்திரீக்கும் ஒரு ஆணுக்கும் ரூ. 5000க்கு போக்கியம் வைத்து (அதன் மூலம் முதல் போக்கியமும் தீர்க்கப்பட்டிருந்தால்) போக்கிய ரத்துச் சட்டம் உண்டா?

பதில்: உண்டு.

கேள்வி: (L 2720 முத்துசாமி தேவர்) குயிட்ரெண்ட் செலுத்தும் இனும் கிராமம் 1945 ஆம் வருடத்திற்கு முன் ஒத்தி வைக்கப்பட்டிருந்தால் ஒத்தி ரத்துச் சட்டம் அதைப் பாதிக்குமா?

பதில்: பாதிக்கும்.

கேள்வி: (L 2730 முகமது அப்பாஸ், திண்டுக்கல்) மாதம் ரூ. 30க்கு மேல் வாடகையுள்ள ஒரு வீட்டை, குடியிருப்பவர் காலி செய்தவுடன் சொந்தக்காரரே ஷை வீட்டில் குடியிருப்பதென்றால் ஜாகை வாடகை கண்ட்ரோலரிடம் தெரிவிக்க வேண்டுமா?

பதில்: தெரிவிக்க வேண்டும்.

கேள்வி: (L 2731 பழனிச்சாமி, ஏர்ப்பட்டி) ஒரு பெண்ணுக்கு வாழ்க்கைச் செலவுக்காக ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்து வரும்படி கோர்ட்டில் தீர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எந்தச் சொத்திலிருந்து தொகை கொடுக்கப்படுகிறதோ அதன் மதிப்பு உயர்வினலோ, அதன் வருவாய் அதிகமானதாலோ அப்பெண் அதிக வாழ்க்கைச் செலவு பெற முடியுமா?

பதில்: முடியும்.

கேள்வி: (ஷை) ஒரு ஆண் குழந்தையை விட்டு முதல் மனைவி இறந்து விட்டாள். புருடன் இரண்டாவது கலியாணம் செய்வதை யாராவது தடை செய்ய முடியுமா? இரண்டாவது மனைவிக்குப் பெண் குழந்தை பிறந்தால் கணவனுடைய சொத்தில் உரிமை உண்டா?

**பதில்:** இரண்டாவது கலியாணம் செய்வதைத் தடுக்க முடியாது. ஆண் குழந்தை இருக்கும் போது (இப்போது இருக்கும் சட்டப்படி) பெண் குழந்தைக்கு வார்சு பாத்தியமில்லை. வருங்காலத்தில் இச்சட்டம் மாறலாம். பெண் குழந்தைக்கும் வார்சு பாத்தியம் அளிக்கும் மசோதா சட்ட சபையில் இருக்கின்றது.

**கேள்வி:** (L 2732 ஆறுமுகம், சிப்பாய், நம்பர் 572562) தகப்பனார் பூர்வீக சொத்தை ஒருவனுக்கு அடமானம் வைத்து வட்டியும் முதலும் கட்ட முடியாமல் அடமானம் வாங்கியவர் கோர்ட்டு மூலமாகச் சொத்தை ஏலம் போட்டு எடுத்து 10 வருடம் ஆகிறது. தகப்பனும் இறந்து விட்டார். பிள்ளைகள் வியாஜ்யமாடினால் சொத்துச் சேருமா?

**பதில்:** சொத்து சேரும் சேராதென்று சொல்ல இன்னும் பல விஷயங்கள் தெரிய வேண்டும். கடன் எதற்காக ஏற்பட்டது; பிள்ளைகள் மைனர்களா, என்பது போன்ற பல விஷயங்கள் தெரிந்தால் தான் இக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும்.

**கேள்வி:** (L 2733 முருகையா, ராமநாதபுரம்) இந்துமத சட்டப்படி ஒரு ஸ்திரீ கணவன் இறந்த பிறகு அவனுக்கு ஈமக்கிரியைகளைச் செய்து விட்டுப் பின்னால் சமூகக் கட்டுப்பாட்டின் பேரில் ஷ. யானுடைய பேர் நாமத்தைச் சொல்லி, அவனுடைய திருமங்கலியத்தை மறு முறை கழுத்தில் கட்டிக் கொண்டு அவளுக்குக் குழந்தை பிறந்தால் குழந்தைகளுக்குத் தகப்பன் சொத்தில் பாத்தியமுண்டா?

**பதில்:** கணவன் இறந்த 280 நாட்களுக்குள் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்குச் சொத்தில் பாத்திய முண்டாகும்.

**கேள்வி:** (L 2753 ராமசாமி செட்டியார், கோவை) அநேகம் பெயர்கள் சொத்துப் பொறுப்பின்றியும் கவர்ன்மெண்ட் லைசென்சு இன்றியும் ஏஜண்டுகளாக இருந்து ரூ. 100க்கு ரூ. 5 வீதம் கமிஷனுக்கு ஏலச் சீட்டு நடத்தி வருகிறார்கள். சீட்டு மெம்பர் ஏலத்தில் கூறி எடுத்த தொகையைக் கொடுக்க ஏஜண்ட் தம்மிடமிருந்து ரொக்கமாய்க் கடன் வாங்கியதாகப் பிராமிசரி நோட்டு எழுதி வாங்கிக் கொள்கிறார். இந்தப் பிராமிசரி நோட் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுத்தால் என்ன ஆகும்?

**பதில்:** நோட்டு எழுதிக் கொடுத்தவர் ஆஜராகாமல் (எக்ஸ்பார்ட்டியாக) இருந்தால் டிக்ரி ஆகலாம். ஆஜராகி நோட்டு பிந்திய கெடுக்களின்படி தொகைகள் கொடுக்க ஜாமீனாகவே எழுதிக் கொடுக்கப்பட்டதென்று கட்சி சொல்லலாம். இக் கட்சி ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவர் ஏலச் சீட்டுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளுக்கு மட்டில் டிக்ரி ஆகலாம்.

**கேள்வி:** (L 2773 ராமானுஜம், பழனி) ஒரு நியூஸ் ஏஜண்டு விற்பனை வரி செலுத்த வேண்டுமா?

**பதில்:** மொத்த விற்பனை வருடத்தில் ரூ. 10,000க்குக் குறையாமல் செய்தால் விற்பனைவரி உண்டு. ஆனால் நியூஸ் பேபர் பிரசுரம் செய்பவர்களே அதற்காக இம்மாகாணத்தில் விற்பனைவரி கொடுத்து விட்டால், அவ்வித பேப்பர்களின் விற்பனைத் தொகையைக் கழித்துக் கொள்ளலாம். ஏனென்றால் நியூஸ் பேப்பர்களுக்கு ஒரு கட்டத்தில்தான் விற்பனைவரி. ஒருவர் செலுத்திய பின் அதே நியூஸ் பேப்பர்கள் எவ்வளவு தடவை கைமாறினாலும் விற்பனைவரி கிடையாது.

**கேள்வி:** (ஷை) ஒரு நபர் தொழில் செய்து விற்பனைவரி செலுத்தி வரும் கணக்குடன், நியூஸ் ஏஜண்சி எடுத்து விற்பனை செய்தால் பத்திரிகைகள் விற்ற கணக்கையும் தாக்கல் செய்து விற்பனைவரி செலுத்த வேண்டுமா?

**பதில்:** வேண்டும். (ஆனால் நியூஸ் பேப்பர்களுக்கு ஒரு தடவைதான் விற்பனைவரி. தலைமை ஆபீசிலேயே வரி கொடுத்து விட்ட பேப்பர்களுக்கு ஏஜண்டுகள் வரி கொடுக்க வேண்டியதில்லை.)

**கேள்வி:** (L 2793 முருகையன், வேட்டக்காரனிருப்பு) கிராம நாட்டாண்மைக்காரர் அல்லது பொதுப் பஞ்சாயத்

தார்கள் கூடி ஊரிலுள்ள நபரை விசாரித்து, குற்றஞ்சாட்டி அபராதம் விதிக்கலாமா? அப்படி அநியாயமாய்ப் பொய்க்குற்றம் சாட்டி அபராதம் வாங்கி விட்டால் ஏழைகள் என்ன செய்யமுடியும்?

பதில்: அபராதத்தைக் கொடுக்க மறுக்கலாம். பொய்க்குற்றம் சாட்டியதால் ஏற்படும் மான நஷ்டத்திற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். குற்றம் சாட்டிய விஷயம் உண்மையாக இருந்தால் பேசாமலிருந்து விடுவது நலம்.

கேள்வி: (L 2794 ராமசாமி, இஞ்சிக்குடி) 29—3—1949-க்கு முன் இரு மனைவியர் உள்ள ஒருவர் இறந்து விட்டார். அவருக்குச் சகோதரரும், முதல் மனைவிக்கு ஆண் குழந்தைகளும் இருந்தால் குழந்தைகள் இல்லாத இரண்டாவது மனைவிக்கு ஜீவனாம்சம் கிடைக்குமா?

பதில்: இரண்டாவது மனைவிக்கு சொத்திலேயே ஒரு பாத்தியம் கிடைக்கும்.

கேள்வி: (L 2795 இசக்கி முத்துத் தேவர், தேவகோட்டை) சிப்பந்தி இல்லாமல் சொந்தத்தில் தனிமையாக நடத்தும் பசும்பால் நிலையத்தை (ஷாப் சட்டப்படி) இரவு 10 மணிக்கு மேல் திறந்து வைத்திருக்கலாமா?

பதில்: இப்பொழுது திறந்து வைக்கலாம்.

கேள்வி: (L 2796 நாராயணசாமி, பொள்ளாச்சி) குடியிருப்பவரை எப்படியாவது காலி செய்துவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் வீட்டின் சொந்தக்காரர் வாடகை வாங்க மறுத்து, மாதா மாதம் மணியார்டர் மூலமாக அனுப்பும் வாடகையையும் பெற்றுக் கொள்ளா விட்டால், இந்த விபரத்தைக் குடியிருப்பவர் வாடகைக் கண்ட்ரோலரிடம் தெரியப்படுத்த வேண்டுமா?

பதில்: கண்ட்ரோலருக்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை. ஆனால் அனுக்காமல் மாதா மாதம் சரியான கெடுவுக்குள் மணியார்டர் செய்து கொண்டே வர வேண்டும்.

கேள்வி: (ஷி) ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டம் பஞ்சாயத்துப் போர்டு கிராமங்களுக்குச் செல்லுமா?

பதில்: மேஜர் பஞ்சாயத்தாக இருக்கும் கிராமங்களுக்கும் செல்லும். இன்னும் குறிப்பிட்ட சில இடங்களுக்கும் இச் சட்டம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி: (L 2805 அருணாசலம், ஆனதாண்டவபுரம்) முதல் மனைவி கலியாணமாகிப் பல வருடங்கள் சென்ற பின் அவளைத்தள்ளி விட்டு ஒருவர் இரண்டாவது தாரம் கலியாணம் செய்துகொண்டு இரண்டாம் தாரத்திற்குக் குழந்தைகளும் இருக்கின்றன. கணவனால் சம்பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கு யார் வார்சு? கணவன் இருக்கும்போது முதல்மனைவிக்கு ஜீவனாம்ச உரிமை உண்டா? பாக வியாஜ்ய உரிமை உண்டா?

பதில்: கணவன் உயிருடன் இருக்கும் போது முதல் மனைவிக்கு ஜீவனாம்ச உரிமை தான் உண்டு. பாக உரிமை கிடையாது. கணவன் இறந்த பிறகு சொத்தில் பாகம் உண்டு.

கேள்வி: (L 2807 பழனியப்பன், சிலோன்) ஒரு ஹிந்துவுக்குப் பூமிகள் நிறைய உண்டு. அவருக்கு ஒரே பெண். தாய் தந்தைக்குப்பின் உரிமையாளர் அப் பெண்ணா? அல்லது பங்காளியா? அப்பெண்ணின் கணவருக்கும் உரிமை உண்டா?

பதில்: பிரிபட்ட குடும்பமாக இருந்தாலும், சுயமாகச் சம்பாதித்த சொத்துக்கள் இருந்தாலும் பெண்தான் வார்சு. அவள் ஆயுசு வரையில் சொத்துக்களை அனுபவிக்கலாம். கணவருக்கு (சட்டப்படி) உரிமை கிடையாது. பெண்ணுக்கு மகன் பிறந்தால் அவளுடைய ஆயுசுக்குப் பிறகு அம்மகனே வார்சாவார். அதுவரை பங்காளிகள் நெருங்கிவர முடியாது.

# 1950-51 வருமான வரி விகிதம் (இன்கம் டாக்ஸ்)

1-4-1950 முதல் 31-3-1951 முடிய உள்ள வருடத்தில் அடியில் கண்டபடி வருமானவரி (இன்கம்டாக்ஸ்) விதிக்கப்படும்.

(வருமானவரி எப்பொழுதும் முந்திய வருட வரும்படிக்கு அடுத்த வருடம் விதிக்கப்படும். உதாரணமாய் 31—3—1950 உடன் முடியும் ஒரு வருடத்தில் ஒருவர் அடையும் மொத்த வருமானத்திற்கு 1950-51 என்ற சர்க்கார் நிதி வருடத்தில் (1—4—1950 முதல் 31—3—1951 வரை உள்ள வருடத்தில்) அவருக்கு வருமான வரி விதிக்கப்படும்)

1. முந்திய வருடத்தில் ரூ. 7200க்கு மேல் வருமானம் இல்லாத பிரிபடாத (அவிபக்த) ஹிந்து குடும்பத்திற்கு இவ்வருடம் (1950—51) யாதொரு வருமான வரியும் கிடையாது. ஆனல் முந்திய வருடக் கடைசியில் அந்தக் குடும்பத்தில் 18 வயது பூர்த்தியான, பாகம் கேட்கக் கூடிய, இரண்டு பாகஸ்தர்களாவது இருக்க வேண்டும்; அல்லது பாகஸ்தர்கள் அப்படி 18 வயது பூர்த்தியாகாதவர்களாக இருந்தால், ஒரே கிளையில் உள்ளவராக இருக்கக் கூடாது. அதாவது ஒருவரும், அவருடைய மைனர் மகனுமாக, அல்லது மைனர் பேரனுமாக இருக்கக் கூடாது. மைனர் இருந்தால், வெவ்வேறு கிளைகளில் உள்ளவராக இருவராவது இருக்க வேண்டும். சென்ற வருடம் இவ்வித குடும்பத்திற்கு ரூ. 5000 வரை வரி கிடையாதென்று இருந்ததை இவ் வருடம் ரூ. 7500 வரை கிடையாதென்று வரம்பு உயர்த்தப்பட்டிருக்கிறது.

2. மற்ற தனி நபர், கூட்டு வியாபாரம் செய்பவர்கள் முதலியவர்களுக்கு முந்திய வருடத்தில் ரூபாய் 3600-க்கு மேல் வருமானம் இல்லாமலிருந்தால் இவ்வருடம் (1950-51) வருமான வரி கிடையாது. சென்ற வருடம் ரூ. 3000 வரைதான் வரி கிடையாது. இவ்வருடம் ரூ. 3600 வரை கிடையாது.

A. மேற்கண்ட தொகைகளுக்கு மேற்பட்ட வருமானமுள்ள தனி நபர்களுக்கும், பிரிபடாத ஹிந்து குடும்பங்களுக்கும், ரிஜிஸ்டராகாத கூட்டு வியாபாரங்களுக்கும் (கம்பெனி அல்லது ஸ்தல ஸ்தாபனமல்லாத) மற்ற எல்லோருக்கும் 1950-51 ஆம் வருடத்தில் கீழ் கண்ட விகிதப்படி (இன்கம் டாக்ஸ்) வருமான வரி விதிக்கப்படும்:—

| | மொத்த வருமானத்தில் | வரிவிகிதம் (ரூபாய் 1-க்கு வரி) |
|---|---|---|
| 1. | முதல் ரூ. 1500க்கு | வரிகிடையாது. |
| 2. | அடுத்த ரூ. 3500க்கு | 0—0—9. |
| 3. | அடுத்த ரூ. 5000க்கு | 0—1—9. |
| 4. | அடுத்த ரூ. 5000க்கு | 0—3—0. |
| 5. | அதற்குமேல் உள்ள ஜாடா வருமானத்திற்கும் | 0—4—0. |

B. கம்பெனிகளுக்கு ஜாடா மொத்த வருமானத்திற்கும் ரூபாய் 1க்கு அணா 4 வரி

C. ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் ஜாடா மொத்த வருமானத்திற்கும் ரூபாய் 1க்கு அணா 4 வரி

## அமித வருமான வரி (சூபர் டாக்ஸ்)

வருமான வரி தவிர, அமித வருமான வரி (சூபர் டாக்ஸ்) கொடுக்க வேண்டியவர்கள் அடியில் கண்ட விகிதப்படி 1950-51ல் சூபர் டாக்ஸ் விதிக்கப்படுவார்கள்.

A. தனி நபர்களுக்கும், பிரிபடாத ஹிந்து குடும்பங்களுக்கும், ரிஜிஸ்டராகாதகூட்டு வியாபாரம் முதலியவைகளுக்கும்.

| மொத்த வருமானத்தில் | | சூபர் டாக்ஸ் விகிதம் (ரூபாய் 1-க்கு வரி) |
|---|---|---|
| 1. | முதல் ரூ. 25,000க்கு | சூபர் டாக்ஸ் கிடையாது. |
| 2. | அடுத்த ரூ. 15,000க்கு | 0—3—0. |
| 3. | அடுத்த ரூ. 15,000க்கு | 0—4—0. |
| 4. | அடுத்த ரூ. 15,000க்கு | 0—6—0. |
| 5. | அடுத்த ரூ. 15,000க்கு | 0—7—0. |
| 6. | அடுத்த ரூ. 15,000க்கு | 0—7—6. |
| 7. | அடுத்த ரூ. 50,000க்கு | 0—8—0. |
| 8. | அதற்குமேல் உள்ள ஜாடா தொகைக்கும் | 0—8—6. |

B. ஸ்தல ஸ்தாபனங்களுக்கு மொத்த வருமானத்திற்கு ரூபாய் 1க்கு 0—2—6 சூபர்டாக்ஸ் உண்டு.

C. கோவாபரேடிவ் சொசைடிகளுக்கு முதல் ரூ. 25,000க்கு மேல் உள்ள பாக்கி ஜாடா வருமானத்திற்கும் ரூபாய் 1க்கு 0—2—6 சூபர் டாக்ஸ் உண்டு.

D. கம்பெனிகளுக்கு சில சலுகைகளுக் குட்பட்டு ஜாடா வருமானத்திற்கும் ரூபாய் 1க்கு ரூ. 0-4-6 சூபர் டாக்ஸ் உண்டு.

## தொழில் வரி விகிதம் மாற்றப்பட்டிருக்கிறது

சென்னை கார்ப்பொரேஷனுக்கும், மற்ற முனிசிபாலிடிகளுக்கும் ஸ்தல ஸ்தாபனங் களுக்கும், அவரவர்கள் எல்லைக்குள் வசிப் பவருக்குத் தொழில் வரி விதிக்க அதிகார முண்டு. வரி விகிதம் என்ன என்று அந்தந்த முனிசிபாலிடி முதலியவைகளால் நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஆனல் எந்த எந்த வரும்படி உள்ளவர்களுக்கு எவ்வளவு தொகைக்கு மேல் வரி விதிக்கக் கூடாதென்று விதிகள் செய்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அந்த விகிதத்திற்கு மேல் ஒரு முனிசிபாலிடி அல்லது ஸ்தல ஸ்தாபனம் வரி விதிக்கக் கூடாது. அந்த விகிதத்திற்குள் அவரவர்கள் வரி விதித் துக்கொள்ளலாம். இப்பொழுது இந்த வரி விதிக்கக்கூடிய உச்ச விகிதம் சர்க்கா ரால் மாற்றப்பட்டிருக்கிறது, இப்போது விகிதம் பின் வருமாறு :—

| ஒருவரின் அரை வருட வருமானம் | அரை வருட வரி — சென்னையில் கார்பரேஷனில் | அரை வருட வரி — மற்ற முனிசிபாலிடி களிலும் ஸ்தல ஸ்தாபனங்களிலும் |
|---|---|---|
| | ரூ. | ரூ. |
| 1. ரூ. 15,000-க்கு மேல் இருந்தால் | 125 | 125 |
| 2. ரூ. 12,000-க்கு மேல், ரூ. 15,000 க்கு மேற்படாவிட்டால் | 100 | 100 |
| 3. ரூ. 9,000 .... ரூ. 12,000 | 75 | 75 |
| 4. ரூ. 6,000 .... ரூ. 9,000 | 50 | 50 |
| 5. ரூ. 4,800 .... ரூ. 6,000 | 37½ | 25 |
| 6. ரூ. 3,000 .... ரூ. 4,800 | 18 | 12 |
| 7. ரூ. 1,800 .... ரூ. 3,000 | 9 | 6 |
| 8. ரூ. 1,200 .... ரூ. 1,800 | 6 | 4 |
| 9. ரூ. 600 .... ரூ. 1,200 | 3 | 2 |
| 10. ரூ. 300 .... ரூ. 600 | இல்லை | 1 |

(18-4-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I A ஸுல் சப்ளிமெண்ட் பக்கம் 56)

# கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
# இதர சர்க்கார் அறிக்கைகள்

## உணவு தானியக்கட்டுப்பாடு உத்தரவு திருத்தம்

ஒவ்வொரு இடத்திற்கும் தனித் தனி லைசென்சு வேண்டும்: 1947 ஆம் வருடத்திய சென்னை உணவு தானியக் கட்டுப்பாடு உத்தரவில் வியாபாரிகள் லைசென்சு பெற்றுக்கொண்டுதான் உணவு தானியங்களில் வியாபாரம் செய்ய வேண்டுமென்று 3 ஆவது விதியில் இருக்கின்றது. ஒரு வியாபாரி ஒரே லைசென்சு வாங்கிக் கொண்டு உணவு தானியங்களைப் பல இடங்களில் வைத்து வியாபாரம் செய்வதைத் தடுப்பதற்காக மேற்படி விதிக்கு ஒரு விளக்கம் சேர்க்கப்பட்டிருக்கிறது' அதாவது ஒரே ஊரில் அல்லது பல ஊர்களில் ஒரு வியாபாரி பல இடங்களில் உணவு தானிய வியாபாரம் செய்தால், ஒவ்வொரு வியாபார ஸ்தலத்திற்கும், தனித் தனி லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது

இனி ஒவ்வொரு லைசென்சிலும் உணவு தானியம் விற்கப்படவேண்டிய ஒரே ஒரு இடமும், அவைகளைச் சேகரம் செய்து வைக்க வேண்டிய ஒரு இடமும்தான் காணப்பட்டிருக்கும்.

*(4—4—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 37)*

## கொண்டைக் கடலை விலை நிர்ணயம்

சென்னை ராஜ்யத்தில் உற்பத்தி செய்யப்படும் கொண்டைக் கடலை (கொத்துக் கடலை)யை ஒரு தடவையில் ஒரு இம்பீரியல் மணகுக்கு மேல் விற்பனை செய்யும் மொத்த வியாபாரிகள் இம்பீரியல் மணங்கு ஒன்றுக்கு ரூ 16-0-0க்கு மேல் விற்கக் கூடாது. சில்லரை வியாபாரத்தில், அதாவது ஒரு தடவையில் ஒரு இம்பீரியல் மணங்குக்குள் செய்யப்படும் விற்பனையில், மேற்கண்ட மொத்த விலையுடன் சில்லறை வியாபாரியின் லாபத்திற்காக ரூ 100க்கு ரூ. 3-ம் மூன்று மைலுக்குமேல் உள்ள தூரத்திற்கு மைல் ஒன்றுக்கு மணங்கு ஒன்றுக்கு தம்படி 5 வீதம் வண்டிச்சத்தமும் சேர்த்தும் விற்கலாம். (படகில் ஏற்றிப் போனால் 4½ தம்படி வீதம்தான்) மொத்த வியாபாரிகளும் சரி, சில்லரை வியாபாரிகளும் சரி மேற்கண்ட உச்ச விலைக்குமேல் விற்பனை வரி வசூல் செய்யக்கூடாது. அதாவது விற்பனை வரி உள்பட மேற்கண்ட விலைக்குமேல் போகக்கூடாது. இதற்கு மேல் விற்றால் மற்றத் தண்டனையுடன், கடலை கட்டி வைக்கப்பட்டிருக்கும் சாக்கு முதலிய சாமான்கள் உள்பட சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படலாம்.

*(4—4—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 38)*

## உணவு தானியப் போக்கு வரத்துக்கட்டுப்பாடு உத்தரவு திருத்தம்.

### பார்லியைப்பற்றி

சென்னை 1947 ஆம் வருடத்திய உணவு தானியங்கள் போக்கு வரத்துக்கட்டுப்பாடு உத்தரவின்படி சில தானியங்களை இம்மாகாணத்தை விட்டு வெளியிடங்களுக்குக் கொண்டுபோக வேண்டுமானாலும், வெளி இடங்களிலிருந்து சென்னை மாகணத்திற்குள் கொண்டுவர வேண்டுமானாலும் சிவில் சப்ளைஸ் கமிஷனருடைய அனுமதிச் சீட்டு (பர்மிட்) வேண்டும். இவ்விதம் பர்மிட் வாங்க வேண்டிய தானியங்களில் பார்லியும் ஒன்று. ஆனால் இனி வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பார்லிக்கும் 'பாக்' செய்யப்பட்ட உள் நாட்டு பேர்ல் பார்லிக்கும் பர்மிட் தேவையில்லை. ஆனால் உள் நாட்டுப் பார்லியானது டின் அல்லது கடுதாசுப் பெட்டியில் கால் பவுண்டுக்குக் குறையாமல் ஒரு பவுண்ட்

வரை பந்தோபஸ்தாக வைக்கப்பட்டு (பாக் செய்யப்பட்டு) வியாபாரச்சின்னத்துடனும் (டிரேட் மார்க்குடனும்) அது உற்பத்தி செய்பவர் பெயர், பார்லியின் ரகம் முதலிய விவரங்களும் அதில் கண்டிருந்தால் மட்டில் விதி விலக்கு. அதாவது இவ்விதமுள்ள பார்லியை இம்மாகாணத்திற்குள் கொண்டு வரவும் வெளியே கொண்டுபோகவும் பர்மிட் வேண்டியதில்லை.

*(11—4—1950) சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 41)*

## நெல் அரைக்கும் மில் லைசென்சு உத்தரவு

1947 ஆம் வருடத்திய நெல் மில் லைசென்சு உத்தரவில் ஏற்கனவே உள்ள 5 ஆவது விதிக்குப்பதிலாக கீழே கண்டபடி 'விதி 5' என்று சேர்க்கப்பட்டிருக்கிறது:

விதி 5: இந்த உத்தரவின்படி லைசென்சு பெற்றவர்கள் இந்த உத்தரவின் எந்த விதிகளையும் லைசென்சில் காணப்பட்டிருக்கும் நிபந்தனைகளையும் மீறக்கூடாது. அப்படி மீறினல், வேறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதுடன், அவருடைய லைசென்சை ரத்து செய்யவும், சிறிது காலம் நிறுத்தி வைக்கவும் (Suspend) சென்னை சிவில் சப்ளை கமிஷனருக்கும் அவரிடம் அதிகாரம் பெற்ற உத்தியோகஸ்தருக்கும் அதிகாரம் உண்டு.

(குறிப்பு:- ஏற்கனவே உள்ள விதியில் லைசென்சில் கண்ட நிபந்தனைகளை மீறக்கூடாதென்று மட்டில் இருந்தது. இப்பொழுது இந்தக் கட்டுப்பாடு உத்தரவின் எந்த விதிகளையும் மீறக்கூடாதென்று சேர்க்கப்பட்டிருக்கிறது)

*(4—4—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 38)*

## ஜவுளி

### ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு திருத்தம்

31-3-1950 வரை உள்ள அரை வருடத்திற்கு வாங்கப்பட்டிருக்கும் லைசென்சு 30—4—1950 முடிய செல்லும் என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

*(4—4—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 37)*

## ஷாப் சட்டம்

### நீக்கப்பட்ட சிப்பந்தி அப்பீல் செய்து கொள்ள வேண்டிய அதிகாரி மாற்றம்:

முதலாளியால் வேலையை விட்டு நீக்கப்பட்ட சிப்பந்தி தம்மை நீக்கியது சரி அல்ல என்று நீக்கப்பட்ட 30 தினங்களுக்குள் ஷாப் சட்ட விதிகளின்படி லேபர் கமிஷனர்

GOOD THINGS ALL THE YEAR ROUND
CAKES & BISCUITS
OF THE FINEST QUALITY
IT'S HERE,
"SAVOY"
Bakers, Confectioners & Restaurateurs
LODGING ROOMS ATTACHED
154, Purasawalkam High Road,
MADRAS—7

The University Tutorial College
37, Singarachari Street, Triplicane
MADRAS.
(Established 1939)
Courses offered (Oral & Postal) :—
1. S. S. L. C.
2. Matriculation
3. Entrance test to group 'D' of the Intermediate
4. Intermediate.
Efficient Coaching & Individual attention assured
Postal tuition our special line
Special accommodation for ladies.
For full particulars apply in person or write to :—
The Director.

என்ற அதிகாரிக்கு அப்பீல் செய்யலாமென்று இருந்த விதியில் தொழிலாளர் நஷ்ட ஈடு கமிஷனர் (Commissioner for Workmen's Compensation) என்ற அதிகாரிக்கு அப்பீல் செய்ய வேண்டுமென்று திருத்தப்பட்டிருக்கிறது.

(28—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 93)

**சிப்பந்திகள் இல்லாமல் குடும்பத்தினரே நடத்தும் கடைகள்-மறுபடியும் ஷாப் சட்டம் உண்டு-இரண்டு விதிகள் மட்டில் கிடையாது:**

1950 ஜனவரி 3-ம் தேதி சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 3-ல் பிரசுரம் செய்யப்பட்ட சர்க்கார் உத்திரவுப்படி யாதொரு சிப்பந்தியுமில்லாமல் குடும்பத்தினரே வேலை செய்யும் கடைகளுக்கு அத்தேதியிலிருந்து ஒரு வருடகாலத்திற்கு ஷாப் சட்டமே பூராவும் கிடையாதென்றும் இவ்வித கடைகளுக்கு ஒரு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ("வக்கீல்" 1950 பிப்ரவரி இதழ் 24-ம் பக்கத்தில் இவ்விதி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.) இப்பொழுது பிறப்பித்திருக்கும் ஒரு புது உத்திரவின்படி மேற்கண்ட விதி விலக்கு ரத்தாகிவிட்டது. இவ்வித கடைகளுக்கும் இனி ஷாப் சட்டம் உண்டு. ஆனால் இரண்டு விதிகள் மட்டில் இவர்களுக்குக் கிடையாது. அதாவது தினசரி திறந்து மூடும் மணி நேரமும் (செக்ஷன் 7) ஒரு கடையில் எந்த எந்த ரிஜிஸ்டர்களும் கணக்குகளும் வைத்துக் கொள்ளவேண்டும்; என்ன என்ன நோட்டீசுகள் போடவேண்டும் என்ற (செக்ஷன் 47) விதியும் இக்கடைகளுக்கு 18-4-50 முதல் ஒரு வருடத்திற்குக் கிடையாது. (மற்ற எல்லா விதிகளும் உண்டு. உதாரணமாக: இக்கடைகள் வாரம் ஒரு நாள் மூட வேண்டும். சுகாதார விதிகள் அனுஷ்டிக்கப்படவேண்டும் முதலியவை)

(18-4-50 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 947)

**ஷாப் சட்டம் விதி விலக்கு:**

ஷாப் சட்டத்தின் எல்லா விதிகளிலிருந்தும் சென்னை ராஜ்யத்திலுள்ள சிலோன் எமிகிரேஷன் கமிஷனர், சிலோன் லேபர் கமிஷனர், இவர்களுக்குக் கீழிருக்கும் ஸ்தாபனங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது இந்த ஸ்தாபனங்களுக்கு இனி ஷாப் சட்டம் கிடையாது.

(28—3—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 733)

**சினிமாக்கொட்டகைகள்:**

ஷாப் சட்டப்படி ஒவ்வொரு வகை ஸ்தாபனமும் தினசரி எந்த மணி நேரத்திற்கு முன் திறக்கக்கூடாது, எந்த மணி நேரத்திற்கு மேல் திறந்து வைத்திருக்கக்கூடாதென்று ஏற்கனவே சர்க்காரால் நிர்ணயம்

ஜெயமாருதி
சிவபுரி புகையிலை பொட்டணங்கள்
சிறந்த சலவை சோப்புகள்
உயர்ந்த கோட்டப்பாக்கு சீவல் ரகங்கள்
தயாரிப்பவர்கள்:
V. N. ராஜன்
ஜெயமாருதி இண்டஸ்ட்ரியல் ஒர்க்ஸ்,
கோமளவல்லி பேட்டை,
சாக்கோட்டை Post.

TKT
வல்லம்
கணபதி சோப்
சலவைக்கு சிறந்தது.
எங்கும் கிடைக்கும்.

செய்யப் பட்டிருக்கிறது. அதன்படி சினிமாக்கொட்டகைகளும், பொதுக் கேளிக்கை ஸ்தலங்களும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் பொது விடுமுறை நாட்களிலும் காலை 9-மணிக்கு முன் திறக்கக் கூடாதென்று இருந்ததை இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது இனி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும், ஒவ்வொரு மாதத்திலும் கடைசி சனிக்கிழமைக்குமுந்திய சனிக்கிழமையிலும் (Penultimate Saturdays) பொது விடுமுறை நாட்களிலும் இவ்விதம் காலை 9-மணிக்கு முன் திறக்கக்கூடாதென்று திருத்தப்பட்டிருக்கிறது. மற்றத்தினங்களில் மாலை 1-மணிக்கு முன் திறக்கக்கூடாது. எல்லாத்தினங்களிலும் இரவு 1-30 மணிக்குப் பிறகு திறந்து வைத்திருக்கக் கூடாது.

(4—4—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 813)

## சினிமாக் கொட்டகைக்குள் இருக்கும் கடைகள்

வாரம் ஒரு தினம் கடைகள் மூடவேண்டுமென்கிற விதி இனி சினிமா டிராமாக் கொட்டகைகளுக்குள் இருக்கும் கடைகளுக்கு கிடையாது.

## இக்கடைகள் தினசரி மூடித் திறக்கும் நேரம்

ஒவ்வொரு கடையும் தினசரி காலை எத்தனை மணிக்கு முன் திறக்கக் கூடாது எத்தனை மணிக்குப் பின் திறந்து வைத்திருக்கக் கூடாது என்ற விதியும் இனி சினிமா டிராமாக் கொட்டகைக்குள் இருக்கும் கடைகளுக்கு கிடையாது. ஆனால், இக்கடைகள் அச்சினிமாக் கொட்டகை திறந்து மூடும் மணி நேரத்தைப் பின்பற்ற வேண்டும்.

(18-4-1950 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I பக்கம் 947)

## ஷாப் சட்டம் சில புது இடங்களில் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

ஷாப் சட்டத்தின் செக்ஷன் 1 (3) (a) படி சென்னை மாகாணத்திலுள்ள எல்லா முனிசிபாலிடிகளிலும் மேஜர் பஞ்சாயத்துக்களிலும் அச்சட்டம் 1-4-1948ல் அமுலுக்கு வந்தது. ஆனால் 1—4—1948க்குப் பிறகு புதிதாக சர்க்காரால் முனிசிபாலிடிகளாகவும், மேஜர் பஞ்சாயத்துக்களாகவும், அமைக்கப்பட்ட கீழேகண்ட இடங்களுக்கு 18—4—1950 முதல் ஷாப் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

### முனிசிபாலிடிகள்

1. குண்டக்கல் 2. திண்டிவனம் 3. திருவள்ளூர் 4. மேட்டுப்பாளையம் 5. அமலாபுரம் 6. பீமாவரம் 7. சிராளா 8. அருப்புக்கோட்டை 9. ராசிபுரம் 10. ஆம்பூர் 11. மேலப்பாளையம் 12. கோபிச்செட்டிப் பாளையம்.

### மேஜர் பஞ்சாயத்துக்கள்

தென் ஆற்காடு ஜில்லாவில்: திட்டகுடி; கோயம்புத்தூர் ஜில்லாவில்: காங்கயம்; புஞ்சை புளியம்பட்டி; சேலம் ஜில்லாவில்: பாப்பாரப்பட்டி; மல்லசமுத்திரம்; திருச்சி ஜில்லாவில்: பூவாளூர்; தொட்டியம்; மோருப்பட்டி; தட்டிக்கார்பட்டி; வட ஆற்காடு ஜில்லாவில்: பள்ளிகொண்டா; தார்படவேடு; கலவாய்; ஜோலார்பேட்டை; திருநெல்வேலி ஜில்லாவில்: வடக்கு வல்லியூர்; திசயன்விளை; நாஜரெத்; மேலகரம்; கோபாலசமுத்திரம்; விளாத்திகுளம்; ஆறுமுகனேரி; பொட்டல் புதூர்; வடக்கு அரியநாயகிபுரம்; வடக்கு காரக்குரிச்சி; பனகுடி; வீரபாண்டியன் பட்டினம்; திருக்கரங்குடி; தஞ்சை ஜில்லாவில்: தலைநாயர்; செங்கல்பட்டு ஜில்லாவில்: தாம்பரம்; மாடாவரம்; திருமுஷி; நரவாக்குப்பம்.

இன்னும் ஆந்திர ஜில்லாக்களில் சில பஞ்சாயத்துக்கள்.

(18—4—50-சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I பக்கம்947)

## வக்கீல் குமாஸ்தாக்களைப் பற்றிய புது விதி:

அங்கீகரிக்கப்பட்ட வக்கீல் குமாஸ்தாக்களைப் பற்றிய விதிகளுடன் 6 A என்று ஒரு புது விதி சென்னை ஹைகோர்ட்டார் அவர்களால் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, கோர்ட் ஏலங்களில், அந்தந்த வழக்குகளில் சம்பந்தப்பட்ட வக்கில்களின் அங்கீகரிக்கப்பட்ட குமாஸ்தாக்கள் (recognised clerks) நேரிலோ, வேறு ஒருவர் பெயரிலோ, தமக்காகவோ, வேறு ஒருவருக்

காகவோ, ஏலம் கேட்கவும் சொத்துக்களை வாங்கவும் கூடாது.

(4—4—1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 39)

## விற்பனை வரி

நாட்டுச் செக்கு: ஒரே ஒரு நாட்டுச் செக்கு மட்டில் வைத்துக் கொண்டு, அச் செக்கில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களை மட்டில் வியாபாரம் செய்பவர்கள் 1—4—1950 முதல் ஒரு வருடத்திற்கு விற்பனை வரி கொடுக்க வேண்டியதில்லை. (ஏற்கனவே உள்ள விதி விலக்கு நீடிக்கப் பட்டிருக்கிறது) ஆனால் இதற்காக ரூ. 6/- கட்டணம் கட்டி லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டும் இவ்விதம் லைசென்சு வாங்கிக் கொண்டு, ஒரு செக்கு மட்டில் வைத்து, அதில் உற்பத்தியாகும் சரக்கில் மட்டில் வியாபாரம் செய்யும் வியாபாரி, தாம் உபயோகப்படுத்துவதற்காக வாங்கும் மணிலாப் பயிறுக்கும், விற்பனை வரி கொடுக்க வேண்டியதில்லை. அவர் விற்பனை செய்யும் எண்ணெய் புண்ணாக்குக்கும் விற்பனை வரி கொடுக்க வேண்டியதில்லை. அவரும் தம்மிடம் எண்ணெய் புண்ணாக்கு வாங்குவோரிடம் விற்பனை வரி வசூல் செய்யக் கூடாது. லைசென்சு காணாமற் போனால் 8 அணா கொடுத்து வேறு நகல் வாங்கிக் கொள்ளலாம்.

(4-4-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 830)

## புதுக்கோட்டையில் விற்பனை வரி:

விற்பனை வரிச் சட்டம் 21 ஆவது செக்ஷனில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து திருச்சி ஜில்லா புதுக்கோட்டை சப் டிவிஷனுக்கும், பங்கனப்பள்ளி சப் தாலூக்காவுக்கும், சென்னை சர்க்கார் கீழ் கண்ட விதிகள் செய்திருக்கின்றனர் :—

(1) 1948—49 வருடத்தில் (அதாவது) 1—4—1948 முதல் 31—3—1949 வரை உள்ள [illegible] வருடத்தில் ஒரு வியாபாரி ரூ. 10,000க்குக் குறையாமல் மொத்த வியாபாரம் செய்திருந்தால், அவர் அந்த வருடத்திற்காக 1—11—1948 முதல் 31—3—1949 முடிய உள்ள மாதங்களில் மட்டில் எவ்வளவு மொத்த வியாபாரம் செய்திருக்கிறாரோ அத்தொகைக்கு மட்டில் விற்பனை வரிச் சட்டத்தில் கண்ட விகிதப்படி விற்பனை வரி கொடுக்க வேண்டும். அதாவது 1—11—1948க்கு முன் செய்த வியாபாரத்திற்கு வரி இல்லை.

(2) பக்குவம் செய்யப்படாத காய் கறி, தேங்காய், பழம் இவைகளில் வியாபாரம் செய்பவர்கள் 1948-49ல் ரூ. 10,000க்குக் குறையாமல் ரூ. 15,000க்கு மேல் போகாமல் மொத்த வியாபாரம் செய்திருந்தால் அவர் ரூ. 40-ம் ரூ. 15,000க்கு மேல் ரூ. 20,000க்கு அதிகப்படாமல் மொத்த வியாபாரம் செய்திருந்தால் அவர் ரூ. 60-ம் கட்டினால் போதும். (ரூ. 20,000க்கு மேல் இச்சாமான்களில் வியாபாரம் செய்தவர்கள் முதல் விதிப்படி மற்ற வியாபாரிகளைப் போல் விற்பனை வரி கொடுக்க வேண்டியவர்கள்தான்)

(4-4-1950 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் I பக்கம் 830)

## சர்க்கரை ஆலைகள் கட்டுப்பாடு விதிகள் (1949)

இவ்விதிகளின்படி கரும்பு சாகுபடி செய்பவர் ஆலை முதலாளியிடம் கரும்பு விற்பனையைப் பற்றி எழுதிக் கொடுக்க வேண்டிய ஒப்பந்தத்திற்கும், ஆலைக்காரர்கள் கரும்பு சாகுபடி செய்பவர்களுக்கு எழுதிக் கொடுக்க வேண்டிய ஒப்பந்தத்திற்கும் நமூனாக்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவைகளின்படி ஒப்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டும். கரும்பு விற்பதாக ஒப்புக் கொண்டவர்களின் பெயர் விவரமும் ஆலைக்காரர்கள் அது விஷயமாய் என்ன செய்தார்கள் என்றும் காட்டக் கூடிய ஒரு ரிஜிஸ்டர் ஆலைக்காரர்களால் வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(15-4-1950 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட் பாகம் II ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 1)

Printed by DR. V. R. MURTY at the Homoeopathy Press, Banadurai, Kumbakonam. Edited and Published by R. NARASIMHAN B.A., B.L., at No. 73, Dabir West Street, Kumbakonam for Southern Book House Ltd.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

REGISTERED
TRADE MARK



(பிராஞ்சு: மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

**சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத்தைலம்,**

**கோகுல் கூந்தல் தைலம்**

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
**Suraj Agencies,**
Madras.

For Coimbatore, Palghat & Nilgiris
**B. Balapattabi Chettiar,**
246, Vysyal St., Coimbatore.

ஹோமியோபதி பிரஸ், கும்பகோணம்.

Regd. No. M. 5399

# V. S. & Sons

# SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

## வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

( Estd. 1925 )